# பார்வை

INSEIN Tamil Newsletter/ அறிவியல் வழிகாட்டி

FREE ISSUE மாதம் இரு வெளியீடு Published twice a month

Issue 04/2017

Mon 10th April 2017

**Parvai, Insein Tamil Newsletter**
48, Glstow Raod, Bedford, MK42 9LP

Tel : 0208-900-9090 Website: www.insein.co.uk
Mob : 079 0843 7921 Email: info@insein.co.uk



Get Your Loans Approved
Best Finance in Your Area
We Can Help you with
MORTGAGES* Residential Mortgages, Re-mortgages, Further Advance, Buy to let
INSURANCES* Building Insurance, Content Insurance, Life Insurance
OTHER SERVICES Self Employment Reg, Vat Reg & Cancellation, Reference letters, Payroll Solution
BUSINESS FINANCE Commercial Mortgage, Commercial Loans, Business Overdraft, LOANS FOR ANY PURPOSE, Secured Loans
Credit And Finance 0208 900 9090
Visit us: 1 Lancelot Parade, Lancelot Road, Wembley HA0 2AJ
Web: www.creditandfinanceltd.com
Email: creditandfinance@gmail.com



UNIQUE Financial Accountants
Accountants and Tax Advisors
Accountancy Services for self-employed, partnership & limited companies
Our Main Services Include:
- Accountancy Services for self-employed
- Partnership and limited companies
- Accounts Preparation
- Book Keeping
- Self-Assessment
- Payroll
- VAT Returns
- Tax Consultancy
- Company Formation
- Business Plan
Get your Accounts done by Professionals!!
Special Offer: Real Time Payroll Services and Self Assessment Return all for £999 Per Year
For more information call: 020 8900 9052
Visit us: Hazel House, 1-3 Lancelot Road, Wembley HA0 2AL
Email: info@uniqueaccountants.biz


## இராணுவ முகாம்களின் விரிவாக்கம் தேசப் பாதுகாப்பா? ஆக்கிரமிப்பா? இராணுவம் ஏன் வெளியேறவேண்டும்?

சமீப காலமாக வன்னிப் பகுதியில் இராணுவம் மக்களுடன் நடந்து கொள்ளும் முறை இக் கேள்விகளை எழுப்பியுள்ளது. போருக்குப் பின்னர் இராணுவம் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தொடர்ந்தும் நிலை கொண்டிருப்பதற்கு அரசு சில காரணங்களைக் கூறியபோது அவற்றில் சில நியாயங்கள் இருப்பதாக கருதி மிகக்குறைந்த அளவில் இருப்பதை கூட்டமைப்பினர் ஏற்றுக்கொண்டார்கள். இருப்பினும் மிகப் பெரும் தொகையான இராணுவம் அங்கு நிரந்தரமாகத் தங்க வைக்கப்பட்டிருப்பதும், பொதுமக்களின் காணிகளை கையப்படுத்தி வைத் திருப்பதனையும் மக்கள் எதிர்த்து வருகிறார்கள். ஆனால் போருக்கு முன்னர் திரட்டப்பட்ட பெருமளவு இராணுவம், போருக்குப் பின்னர் தேவைப்படாமல் போகவே, அதனைத் தீனி போட்டுப் பராமரிக்கும் அவல நிலை ஏற்பட்டுள்ளதாக அரசு நியாயம் கூறியது. இதன் காரணமாக ஐ. நா. படைகளின் தேவைகளுக்கு படிப்படியாக அனுப்பப்படுவதால் இப் பிரச்சனையைத் தீர்க்க கால அவகாசம் தேவை என அரசு சில நியாயங்களை சர்வதேச அழுத்தங்களைச் சமாளிக்கும் வகையில் கூறி வருகிறது. ஆனால் இராணுவம் அந்தக் காரணங்களினால் தான் அங்கு வைக்கப்பட்டிருக்கிறது எனில் அவர்கள் மக்களுடன் முரண்படுவதற்குக் காரணம் என்ன?

இராணுவத்தின் மிக மோசமான அணுகுமுறைகள் அவர்கள் அங்கு நிலை கொண்டிருப்பதற்காக அரசு தெரிவிக்கும் காரணங்களை விட மிகவும் முரணாக உள்ளது. புதுக்குடியிருப்பு, கேப்பாபிலவு போன்ற பகுதிகளில் உள்ள மக்கள் தமது காணிகளிலிருந்து இராணுவம் வெளியேற வேண்டுமென இரவு

(தொடர்ச்சி 6..)


SURIYA JEWELS
சூரியா ஜீவல்ஸ்
22CT SINGAPORE GOLD
T : 0208 552 2224
292, High Street, North Eastham- London E12 6SA
2.5% குறைந்த வட்டி விகிதத்தில் அடைவு வைக்கலாம்





Dosa Specialist Sarasas South Indian Restaurant
Come and try our South Indian, Chetinard, North Indian, Indo Chinese & Sri Lankan Dishes
We cater for special occasions Indoor & Outdoor
630-634 Uxbridge Road, Hayes, Middlesex UB4 0RY
www.sarasarestaurant.com
Tel No.: 0208 561 8188



JAY VISVA SOLICITORS
Solicitors and Commissioners for Oaths
Furthering your interests
Solicitors
Mr Jeyarajan Visvalingam, MA, LLB (Hons), Solicitor
Mrs Jyothsna Somasundar BAL, LLB (Hons), Solicitor
Mr. Nesar Afsar BA. (Hons), Solicitor
Mrs. Lingeswary Balarajan Attoney at Law
Our Staff Speak Tamil, Kannada, Hindi and Punjabi.
OUR LEGAL SERVICES
Lawyers for your Business The Law Society
Civil litigation
Commercial Litigation / Disputes
Conveyancing- Commercial & Residential Property
Immigration law
Wills and Probate
Liquor Licensing
Planning law
Family law
Neighbour Disputes
CONTACT US | 0208-573-6673 | 0794-369-8335
ADDRESS | 1st Floor, 784, Uxbridge Road, Hayes, Middlesex, UB4 0RS
Authorised & Regulated by the Solicitors Regulation Authority, SRA ID: 599586

HARROW INDEPENDENT COLLEGE
*School of Mathematics, Science & Economics*



Your Pathway to Top British Universities

Harrow Independent College
308-310 Eastcote Lane, Harrow, HA2 9AH, United Kingdom
Tel: +44 (0)208 423 6227 Mobile: +44 (0)7957 317668
www.harrowindependentcollege.co.uk

With our Individual Learning Plan (ILP)

UNIVERSITY PREPARATION PROGRAM – (UPP)
- GCE AS/A2 Advanced Level Courses
- UCAS application advice
- Special coaching to write expert personal statements
- Individual coaching for University interviews
- Expert career advice by industry professionals
- Small class sizes (max. 8)

Specialisation leads to
- Medicine / Dentistry
- Electrical and Electronics Engineering
- Aerospace or Aeronautical Engineering
- Econometrics
- Computer Systems Engineering
- Physical Sciences

*Expert, dedicated and committed teachers with over 20 years experience in teaching. In the past 5 years we have helped many students to secure places at top Universities.*

CALL US NOW ON
020 8423 6227

We are ready to help and support your child to achieve a Better and Brighter Future.

edexcel Approved Centre from Pearson
UCAS We are a UCAS registered centre
ASIC ACCREDITATION SERVICE for INTERNATIONAL SCHOOLS, COLLEGES & UNIVERSITIES

We will help all students to realise their maximum potential!

செல்வராஜா
கோல்டு ஹவுஸ் & டெக்ஸ்டைல்ஸ்



அட்சய திதியை முன்னிட்டு
இம்மாதம் 28, 29ம் திகதிகளில் நகைகள் அனைத்தும்
நம்பமுடியாத விலைக்கழிவில்
£300க்கு மேல் நகைகள் கொள்வனவு செய்பவர்களுக்கு
ஓர் அழகிய இலட்சுமி Coin முற்றிலும் இலவசம்
நடைபெறும் புதிய சீட்டுத் திட்டத்தில்
இணைந்து நீங்களும் அதிஷ்டசாலியாகலாம்.

EXCLUSIVE DESIGNER JEWELS & SAREES

Selvaraja Gold House & Textile
Exclusive Designer Jewellery & Sarees
162b, Mitcham Road London SW17 9NJ
Tel : 020 8767 3795 | 07825 005 269


No more long queues!
No more long car drives!
No more carrying bags!
Your Grocery Shopping Gone Easy Now!
Wherever you are in the UK, order all your favourite Sri Lankan "Groceries & Vegetables" from the comfort of your warm and cosy homes and get them delivered at your door step
Believe it or not! Now you can even order "Frozen Fish" and other "Frozen food" online!
www.elakkiaonline.com
ELAKKIA
Your convenience is our priority
Login
Search
Home
Groceries
Savouries
Frozen
Fruits & Vegetables
ELAKKIA
We are delighted to announce our new venture elakkiaonline an online shopping channel.
GROCERIES
SPICES
CURRIES & SAUCES
PICKLES & SAMBALS
VEGETABLES & FRUITS
RICE & FLOURS
HEALTH & BEAUTY
KITCHEN & TABLEWARE
SAVOURIES & FROZEN
FREE DELIVERY*
on all orders over £35
Promo Code: SIL2710
*Free Delivery offer valid till 31 December 2015
*Terms and conditions apply.
Save time, trouble and money!
www.elakkiaonline.com
Another new venture from your favourite RUBY'S group
email: info@elakkiaonline.com




## வோல்தம்ஸ்ரோ கற்பகபதி
# கற்பக விநாயகர் கோவில்

2-4 Bedford Road, Walthamstow, London E17 4PX.
Tel: 020 8523 3819

### விசேட தினங்கள்

| | | |
|---|---|---|
| 14. 04. 2017 | வெள்ளி | ஏவிளம்பி புத்தாண்டு, சங்கடகர சதுர்த்தி விரதம். |
| 17. 04. 2017 | திங்கள் | மூலம். |
| 19. 04. 2017 | புதன் | அட்டமி |
| 22. 04. 2017 | சனி | ஏகாதசி விரதம் |
| 24. 04. 2017 | திங்கள் | பிரதோச விரதம் |
| 25. 04. 2017 | செவ்வாய் | அமாவாசை விரதம். |
| 27. 04. 2017 | வியாழன் | கார்த்திகை விரதம் |
| 29. 04. 2017 | சனி | சதுர்த்தி விரதம் |
| 03. 05. 2017 | திங்கள் | அட்டமி |
| 06. 05. 2017 | சனி | ஏகாதசி விரதம் |
| 07. 05. 2017 | ஞாயிறு | பிரதோச விரதம், |
| 08. 05. 2017 | திங்கள் | சித்திரைச் சித்திரை, சித்தரகுப்த விரதம். |
| 10. 05. 2017 | புதன் | சித்ராப் பௌர்ணமி. |
| 14. 05. 2017 | ஞாயிறு | மூலம், சங்கடகர சதுர்த்தி விரதம் |



# உயர்வாசற்குன்று முருகன் கோவில்
# HIGHGATEHILL MURUGAN TEMPLE

200A Archway Road, N6 5BA, Tel: +44 (0) 20 8348 9835
www.highgatehillmurugan.org, E-mail: admin@highgatehillmurugan.org

### தினசரி பூசைகள்

| | | |
|---|---|---|
| 14. 04. 2017 | வெள்ளி | ஏவிளம்பி புத்தாண்டு பகல் 108 சங்காபிசேகம், மாலை ஸ்ரீவிநாயகர், முருகன் வீதியுலா சங்கடகர சதுர்த்தி விரதம் |
| 20. 04. 2017 | வியாழன் | நடேசர் அபிசேகம். - 2 |
| 22. 04. 2017 | சனி | ஏகாதசி விரதம் |
| 24. 04. 2017 | திங்கள் | பிரதோச விரதம் |
| 25. 04. 2017 | செவ்வாய் | அமாவாசை விரதம். |
| 27. 04. 2017 | வியாழன் | சித்திரைப்பரணி, கார்த்திகை விரதம் |
| 29. 04. 2017 | சனி | சதுர்த்தி விரதம் |
| 01. 05. 2017 | திங்கள் | சஷ்டி விரதம் |
| 06. 05. 2017 | சனி | ஏகாதசி விரதம் |
| 07. 05. 2017 | ஞாயிறு | பிரதோச விரதம், கும்பாபிசேக தினம், காலை 1008 சங்காபிசேகம், மாலை மணவாளக்கோலம், ஸ்ரீமுருகன் வீதியுலா. |
| 08. 05. 2017 | திங்கள் | சித்திரைச் சித்திரை, சித்தரகுப்த விரதம். |
| 10. 05. 2017 | புதன் | சித்தராப் பூரணை |
| 14. 05. 2017 | ஞாயிறு | சங்கடகர சதுர்த்தி விரதம் |

# SRIHARANS

**SOLICITORS**

*Commissioner of Oaths*

**A. SRIHARAN**
**R. S. SRIHARAN**

- **Immigration, Human Rights, Nationality**
- **உள்நாட்டிற்குள் வருபவர், தஞ்சம் கோருவோர்.**
- **Conveyancing (Residential & Commercial)**
- **இயற்கைப் பண்பு கொண்ட அஸ்தி உரிமை மாற்றம்**
- **Divorce & Family Disputes**
- **குடும்பச் சட்ட விவகாரம்.**
- **Child Care & Contact Orders**
- **Civil Litigation**
- **Legal Aid Work**
- **Probate**

THE LAW SOCIETY · ACCREDITED
Immigration & Asylum

THE LAW SOCIETY · ACCREDITED
Conveyancing Quality

THE LAW SOCIETY · ACCREDITED
Family Law

✧ *We stand for fairness, Rule of Law and justice for all.*
நாம் நியாயத்திற்காகவும், சட்டத்திற்காகவும், அனைவரினதும் நீதிக்காகவும் முன்னிற்போம்.

✧ *We work hard to achieve this for every one of our clients*
எமது அனைத்து வாடிக்கையார்களுக்காக நாம் அயராது உழைப்போம்.

✧ *Our clients are our good ambassadors*
எங்களுடைய ஒவ்வொரு வாடிக்கையாளரும் எமது நல்ல தூதுவர்கள்.

**223 THE BROADWAY, SOUTHALL, MIDDLESEX, UB1 1ND**
**DX: 119583 SOUTHALL 3**

**TEL: 020 8843 9974, FAX: 020 8574 1766**

**Conveyancing Direct Line: 020 8574 9177**

**Email: info@sriharanssolicitors.co.uk, Web: www.sriharanssolicitors.co.uk**

*This Firm is Authorised and Regulated by the Solicitors Regulation Authority - SRA No: 70909*
*"Contracted with the Legal Aid Agency"*

## இராணுவ முகாம்களின்

(1ம் பக்கம் தொடர்ச்சி....)

பகலாகப் போராட்டம் நடத்துகின்றனர். போர் முடிவடைந்து 8 ஆண்டுகளாகி விட்ட நிலையிலும் இப்போராட்டங்கள் தீவிரமடையக் காரணம் என்ன? அரசு உத்தரவு பிறப்பித்தும், இராணுவம் அவற்றை விடுவதாக இல்லை. தேர்தல் அண்மையில் இல்லை எனக் காணப்படுவதால் அரசியல்வாதிகளும் அந்த மக்களுடன் இல்லை.

மக்கள் அங்கு நடத்தும் போராட்டம் வெறுமனே காணிகளை விடுவிப்பதற்காக மட்டுமல்ல. சாதாரண மக்களின் அன்றாட வாழ்க்கையில் இராணுவத்தின் தலையீடு அதிக அளவில் உள்ளது. மக்கள் சுதந்திரமாக செயற்பட முடியவில்லை. வர்த்தகம் செய்ய முடியவில்லை. தமக்கென வீடுகளை அமைத்துத் தமது சொந்த நிலங்களில் விவசாயம் செய்து வாழ முடியவில்லை.

கடற்படையினரால் கையகப்படுத்தப்பட்ட காணி-களுக்குள் அந்த மக்களின் வீடுகள் உள்ளன. ஆனால் அந்த மக்கள் தற்போது மர நிழல் களில் கூடாரம், கொட்டில் அமைத்து நீர் வசதி, மின்சாரம், பாடசாலைகள், போக்குவரத்து அற்று வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்கள்.

புலம்பெயர் தேசங்களிலே இந்த மக்களின் பரிதாப நிலையைச் செய்திகளாக்கி ஊடகங்கள் பணம் பண்ணுகின்றன. ஆனால் அங்கு சர்வதேச செஞ் சிலுவைச் சங்கம் போன்ற சர்வதேச அமைப்புகளால் வழங்கப்படும் சமையல் பாத்திரங்கள், போர்வைகள், சிறு விளக்குகள் போன்றவற்றிற்கு மக்கள் கையேந்துகின்றனர்.

மக்களின் போராட்டங்கள் படிப்படியாக வலுவடைய கடற்படை தனது தந்திரங்களையும் மாற்றி வருகிறது. அந்த நிலங்கள் வன பரிபாலனத் திணைக் களத்தினுடையது என தற்போது கூறத் தொடங்கி யுள்ளது. ஆனால் மக்கள் அக் காணிகளுக்கான உரிமங்களை வைத்திருந்தும் இதுவே நிலமை. இப் போராட்டங்களை தலைமை தாங்கி நடத்தும் செயற்பாட்டாளர்களைப் பயமுறுத்தும் பொருட்டு அவர்களைப் படம் எடுப்பது, அடிக்கடி அழைத்துப பங்குபற்றுவோர், கலந்து கொள்வோர் பற்றிய விபரங்களைத் திரட்டுவது என பயமுறுத்தல்கள் தொடர்கின்றன. இத்தகைய நடிவடிக்கைகள் மூலம் மக்களை அவற்றில் பங்குபற்றாமல் தடுக்க முனை-கிறார்கள். தலைமை தாங்கி நடத்துவோர் மீது வன்முறையைத் தூண்டுவதாக குற்றம் சுமத்து கின்றனர்.

காணிகளில் சிலவற்றை அம் மக்களின் அழுத்தம் காரணமாக இராணுவம் விடுவித்துள்ளது. ஆனால் அந்த நிலங்களில் அங்கு சென்று வாழ முடிய வில்லை. அந்த நிலங்களும், வீடுகளும் திட்டமிட்டுப பாழ்படுத்தப்பட்டுள்ளன. இந் நிலையில் அம் மக்களுக்கு எவ்வித நிவாரணங்களும் வழங்கப் படவில்லை. இத் திட்டமிட்ட அழிப்புகளுக்குக் காரணம், இராணுவம் அவற்றை விடுவிக்க விருப்பம் இல்லாமல் உள்ளனர். அதனால் தான் அவ்வாறு விடுவிக்கும்போது பழிவாங்குகிறார்கள்.

அங்கு காணிகள் சில இராணுவத்திற்கு ஒதுக்க-ப்பட்டுள்ளதாக சுவரொட்டிகள் போடப்பட்டுள்ளன. இவை முன்னர் காணப்படவில்லை என மனித நேய செயற்பாட்டாளர்கள் கூறுகின்றனர். முட்கம்பி வேலிகள் போடப்பட்டுள்ளன. இதன் பின்னணி என்ன?

இப்பிரதேசத்தில் வாழும் மக்கள் தொடர்ச்சியாகப் போராடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற பகுதிகளில் தமது காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் விபரங்களைக் கோரி அதிகளவு பெண்கள் போராடி வருகின்றனர். இவர்களுக்கான அமைதி எப்போது?

இப்போராட்டங்கள் தற்போது புதிய பரிமாணத்தைப் பெற்று வருகிறது. காணாமல் ஆக்கப்பட்டோர் சிங்களப் பகுதிகளிலும் உள்ளனர். அவர்கள் தனியாகப் போராடுகின்றனர். உதாரணமாக பத்திரிகையாளர் எக்னாலியகொட அவர்களின் மனைவி தனது கணவனின் மறைவுக்கு நியாயம் தேடி தனித்துப் போராடி வருகிறார். அவரது போராட்டத்திற்கு உலகளவில் ஆதரவு பெருகி வருகிறது. புதுக்குடியிருப்பு, கேப்பாபிலவு மக்களும் தமது கோரிக்கைகளைச் சிங்களத்திலும் பதாகை களில் பொறித்துத் தாங்கி வருகின்றனர். ஆதரவுக் கரம் தேடி சிங்களத்திலும் கடிதங்களை எழுதி சிங்கள ஆதரவாளர்கள் மத்தியிலும் விநியோகித்து வருகின்றனர். இந்த மக்களின் இம் முயற்சிகளால் தமிழ், சிங்கள அரசியல்வாதிகள் மத்தியிலே பெரும் குழப்பம் ஏற்பட்டுள்ளது. இனவாத அரசியல் விலைபோகாது என்பதை உணரத் தொடங்கி யுள்ளனர். இதனால்தான் அரசியல்வாதிகளை மக்கள் தவிர்த்து வருகின்றனர்.

இப் பின்னணியில்தான் ஜெனீவா தீர்மானங்களை நிறைவேற்ற மேலும் இரண்டு வருடகால அவகாசம் இலங்கை அரசிற்குக் கிடைத்துள்ளது. இடைக்கால நீதியை வழங்கி இழந்த வாழ்வை மீளவும் கட்டி எழுப்ப வாய்ப்புகளை வழங்குவதாக உறுதி அளித்த் அரசு இந்த விதத்தில்தான் மக்களுக்கான இடைக்கால நீதியை வழங்க எத்தனிக்கிறது.

இலங்கை அரசு பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதி, பொறுப்புக்கூறல், காணாமல் போனோர் பற்றிய விபரங்களைத் திரட்டுவதற்கான காரியாலயம் அமைத்தல், போர்க்குற்ற விசாரணைக்கான நீதிப் பொறிமுறையை அமைத்தல் எனப் பலவற்றை நிறைவேற்றுவதாக வாக்குறுதி அளித்தது. ஆனால் அவை இன்னமும் பாதித் தூரத்தைக்கூட கடக்க வில்லை. உள்ளூராட்சித் தேர்தல், பொதுத்தேர்தல் என்ற சடங்குகளை நோக்கி அரசு தனது கவனத்தைச் செலுத்தத் தொடங்கியுள்ளது.

இந் நிலையில் தமிழ் அரசியல்வாதிகளும் தற் போதிருந்தே தேர்தல் அரசியலிற்குத் தயாராகி வரு கின்றனர். தற்போதுள்ளவர்களுக்கு மீண்டும் நியமனம் கிடைக்குமா? என்ற சந்தேகங்கள் எழுந்துள்ளதை கூட்டமைப்பிற்குள் இடம்பெற்று வரும் சச்சரவுகள் காட்டுகின்றன. இதனால் கூட்டமைப்பு பிளவுபடு வதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன. ஜெனீவா தீர்மானத்தை ஆதரித்தும், எதிர்த்தும் அறிக்கைகள் வெளியாகின. தமிழரசுக்கட்சி முக்கியஸ்தர்களான சம்பந்தன், சுமந்திரன் ஆகியோரைத் தனிமைப் படுத்தித் திட்டும் அரசியல் ஆரம்பமாகியுள்ளது. இந்த அணிச் சேர்க்கைகள் மக்கள் நலன் சார்ந்ததா? அல்லது பதவி, அதிகாரம் சார்ந்ததா? என்பதை மக்கள் தீர்மானிக்கும் வேளை இது. தேர்தலுக்கு முன்னதாகவே மக்கள் தம்மைத் தயாராக்கிக் கொள்ளவேண்டும்.

வட மாகாணசபை முதல்வர் தேர்தலில் நிற்கும் போது போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வைச் சீர் செய்ய தாம் சேவை செய்யப் போவதாகக் கூறிப் பதவியைப் பெற்றார். ஆனால் தற்போது முழு நேர அரசியல்வாதியாக மாறி, ஏறிய ஏணியை உதைக்கும் பணியில் ஈடுபட்டு வருகிறார். நீண்டகால அரசியல்வாதிகளை, பாராளுமன்ற உறுப்பினர்களை கேள்வி கேட்டு வருகிறார். அவர் புதிய அரசியல் கூட்டணி ஒன்றிற்கு வித்திட்டு வருகிறார். மக்களுக்குப் புதிய அரசியல் கூட்டணி அவசியமா? அல்லது தீர்வுகள் அவசியமா? பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், பிரதேசசபை உறுப் பனர்கள் என அனைவரும் கூட்டமைப்பைச் சார்ந்தவர்கள். இவர்கள் இதுவரை என்ன பணிகளைச் செய்தார்கள்? இவர்கள் பதவிகளை அலங்கரிக்கிறார்கள். ஆனால் மக்கள் துன்பத்தைச் சுமக்கிறார்கள். ஏன் இந்த அவலம்?

மக்கள் இந்த அனுபவங்களினூடாக புதிய மாற்றத்தை நோக்கிச் சிந்திக்க வேண்டும். தற் போதுள்ள அரசியல் தலைமைகளால் 21ம் நூற்றாண்டில் வாழும் மக்களின் தேவைகளைப் புரிந்து கொள்ள முடியவில்லை. புதிய இளம் தலைமுறை வேலை வாய்ப்புகளை, முதலீடுகளை, சிறந்த கல்வியை, ஆரோக்கியமான வாழ்வை நாடி நிற்கிறது. ஆனால் இன்றைய அரசியல்வாதிகள் யாவற்றையும் தமது குறுகிய தேசியவாதம் என்ற கண்ணாடி ஊடாக பார்க்க முனைகின்றனர். இத் தூர திருஷ்டி அற்ற குருடர்களால் மாற்று வழிகளைக் காண முடியாது. தரவும் முடியாது.

இருப்பினும் சமூகத்திலுள்ள புத்தி ஜீவிகள், சமூக செயற்பாட்டாளர்கள் என்போர் இக்கொடுமைகள குறித்து மௌனமாக இருப்பது மிகவும் வேதனைக் குரியது. வேட்க வைக்கிறது. மக்கள் விழிப்பாக இருப்பதை அவர்கள் அவ்வப்போது நடத்தும் போராட்டங்கள் உணர்த்துகின்றன. இவற்றைத் தொடர்ந்தும் தனிமைப்படுத்தி அவ்வப்போது சில எலும்புகளைப் போட்டு மௌனிக்க வைக்க அரசியல்வாதிகள் முயற்சிக்கின்றனர். இதனால் இப் போராட்டங்கள் அப் பிரதேசங்களிலேயே மழுங்கி விடுகின்றன. இவற்றை ஒருமுகப்படுத்த எவரும் இல்லை. ஒருமுகப்படுத்தாவிடில் மாற்றங்கள் நிகழப்போவதில்லை. யார் இந்த இணைப்பை ஏற்படுத்துவது?

தேசியவாதம் என்ற சகதிக்குள்ளிருந்து மாரடிப்பதை விடுத்து புதிய அரசியலை நோக்கிப் பார்வையைச் செலுத்த வேண்டும். சிங்கள அரசியல் வெகு தூரம் மாறிவிட்டது. தற்போது பேரினவாத அரசியல் தனிமைப்படுத்தப்பட்டு ஒரு சிறு குழுவின் கைகளுக்குள் சென்று விட்டது. அது தற்போது வீரியமாக தென்பட்ட போதிலும் அதன் உட் கூறுகள் உழுத்து விட்டன. சுயநலமும், அதிகாரப் பேராசையும், ஊழலும் உள் நோயாக உள்ளன. மக்கள் இவற்றை விரைவில் அடையாளம் காண்பார்கள். பன்மைத்துவ ஜனநாயகம், மனித உரிமை, சட்ட ரீதியான, வெளிப்படைத் தன்மையுள்ள ஆட்சி என மக்கள் விளித் தெழுந்துள்ளார்கள். எனவே பரந்த ஜனநாயக பாதையை நோக்கி பார்வையைச் செலுத்துவதே இன்றைய தேவையாக உள்ளது.

எப்பொழுதும் நியாயமான விலை.... எல்லாமே புத்தம் புது டிசைன்கள்...

வாருங்கள்..! வாங்கி செல்லுங்கள்...



The Leading Jewellery store in London with the **largest selections** including **Diamond Jewellery, Thaali Kodi** & all **Studded Jewellery**

தாலிக்கொடிக்கு
22 CARAT
PERFECT
சான்றுதழ்
வழங்கப்படும்

# Rathy Jewellers Ltd

28 Ealing Road, Wembley, HA0 4TL. Tel: **020 8903 3063**

Unit 6, Plaza Parade, 29 -33 Ealing Road, Wembley HA0 4YA. Tel: **020 8900 0818**

**Opening Time:**

Monday - Saturday: 10.00am - 6.30pm, Sunday: 11.00am - 6.30pm

எங்களிடம் வரும் பழைய நகைகள் 24ct தங்கமாக மாற்றப்பட்ட பின்னர்தான் மீளத் தயாரிக்கப்படுகிறது. அதனால் எல்லா நகைகளுக்கும் 22 கரட் சரியாக இருக்கும்.

வாழ்க வளமுடன்

நீங்கள் வியக்கும் வண்ணம் வரைகலை செய்திட... உங்கள் எண்ணம்போல் அச்சுப்பதிப்பு செய்திட

# ஆர். எஸ். பிரிண்டர்ஸ்

விரைவான சேவை - தரமான அச்சுப்பதிப்பு - குறைந்த விலை



Graphic Design - Printing
Brochures - Wedding Cards
Invitation Cards
Letterheads - Business Cards - Invoices
Foil Printing - Cake Boxes
Plastic Bags, Plastic Cards
Rubber Stamp

வரைகலை, அச்சுப்பதிப்பு, கண்கவரும் வண்ணங்களில் விதவிதமான அழைப்பிதழ்கள், பலகாரப் பெட்டிகள், அரங்கேற்ற மலர்கள், நினைவு மலர்கள், அலுவலகத்திற்குரிய அச்சுப்பதிவேடுகள் மற்றும் உங்கள் தேவைக்கான அனைத்து அச்சுப்பதிப்புக்களுக்கும் அணுகவும்.


RS PRINTERS

**RS Printers Ltd**, 88 Horsenden Lane North, Greenford, Middlesex UB6 7QH
T: **020 8782 3844**, M: **077 6522 4337**, Fax: 020 8903 6038
Email: **rsprintersltd@gmail.com**, **rsprintersltd@aol.com**, **www.rsprinters.com**

**உடன் தொடர்புக்கு: ரமணன் - 077 6522 4337**

20 வருட அனுபவம்

# KQ Solicitors



## We Specialise in

## Immigration - Personal injury
## Civil Litigation

**EEA Regulations**



**KQ Solicitors**

**Luton Office:**
Temple Chambers
68-72 Stuart Street
Luton, Bedfordshire, LU1 2SW

**Harrow Branch:**
432 Alexandra Avenue
Harrow, Middlesex
HA2 9TW

**Tel: 01582 966 180**

**Aishanoor (Solicitor) Mobile : 0775 620 2066 | Rahim: 0773 633 2563 / 0777 208 2670**

**E-mail: info@kqsolicitors.com | web: www.kqsolicitors.com**

RISING SUN
HOTEL • RESTAURANT • BAR

Rising Sun Hotel & Restaurant
138 Greenford Road, Sudbury Hill, Harrow, Middlesex HA1 3QL
Tel: 0208 422 2575 - Email: admin@risingsunhotels.com - www.risingsunhotels.com





We have expanded our services...

- Banquet Hall with 120 people capacity (Ample Free Carpark)
- Hotel Room Facilities Available
- Weekend Special Buffet with Live Music & Fine Dining À La Carte service on Monday to Thursday
- Highend Catering on our Brand of "Abi"
- Decoration & Event Management Services
- Special Live Cooking - Hoppers, Kothu and Dosa available for Indoor and Outdoor

Abi Caterers

Catering Hotline: 0208 166 5569





Abi Fast Food: 233, The Broadway, Southall, Middlesex UB1 1ND
Tel: 0208 813 9494

Home Delivery and Online Order Available
Order Online: www.abifastfood.com | Email: info@abifastfood.com

## இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு –Democratic Socialist Republic of Sri Lanka



(சென்ற இதழின் தொடர்ச்சி....)

மறைந்த பாலா தம்பு அவர்களின் தலைமையிலான இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தின் பங்களிப்பும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். சிங்களத் தொழிலாளர் களைப் பெரும்பான்மையாகக் கொண்டு இயங்கி வரும் இலங்கை வர்த்தக ஊழியர் சங்கம் தமிழர்களின் சுய நிர்ணய உரிமையை 1982இல் அங்கீகரித்தது.

இனக்கலவரத்தின் போது பாதிக்கப்பட்ட தமிழ்த் தொழிலாளர்களுக்கு குரல் கொடுத்து, தமிழ் ஊழியர்கள் இனரீதியாக பாதிக்கப்பட்ட போது அவற்றைச் சந்திக்குக் கொண்டு வந்த பெருமை அச்சங்கத்திற்கு உண்டு.

தமிழ் ஊழியர்கள் தமிழர்கள் என்பதால் பல்வேறு இன ஒதுக்கல் கொள்கைகளுக்கும் ஆட்பட்டு இன்னல்களையும் அவலங்களையும் அனுபவித்து வருகின்றனர். இந்நாட்டில் தேசிய பொருளாதாரத்தின் மையமாக விளங்குவது மலையகப் பிரதேச தேயிலை, றப்பர், தென்னைப்பயிர் செய்கையாகும். வெறும் காடாகவும், மலையகப் பிரதேசமாகவும் இருந்த மண்ணை வளமுள்ளதாக்கி பொன் கொழிக்கும் பூமியாக்கிய பெருமை மலையகத்தில் வாழும் தமிழ்த் தொழிலாளர்களைச் சார்ந்ததாகும்.

ஆங்கிலேயர் இலங்கையை 150 ஆண்டுகளுக்கு மேலாக ஆட்சி செய்தனர். அவர்களது ஆட்சிக் காலத்தில் தமிழகத்திலிருந்து கொண்டுவரப்பட்ட தமிழ்த்தொழிலாளர்களே இன்று மலையகத்தில் வாழும் மக்கள், குறைந்த சம்பளத்தில் கூடிய வேலை செய்து மலையகப் பிரதேசத்தைப் பசும் பூமியாக்கியவர்கள்.

பிரித்தானிய அரசாங்கம் காலணி ஆட்சி நடத்திய காலத்தில் மேற்கத்திய தீவுகளிலிருந்து கொண்டு-வரப்பட்ட கறுப்பர்களே பிரித்தானிய நாட்டில் அடிமையாக்கி வேலைக்கு அமர்த்தப்பட்டவர்கள். இன்று இந்தக் கறுப்பர்கள் பிரித்தானிய மக்களுக்குச் சமமான உரிமைகளைப் பெற்று கௌரவமாக வாழ்ந்து வருகின்றனர். இனத்தால் கறுப்பர் களானாலும் மனித உரிமைகளின் அடிப்படையில் சமமாக நடத்தப்படுகின்றனர். சகல குடியுரிமை, வாக்குரிமைகளையும் அனுபவித்து வருகின்றனர். பிரித்தானியப் பாராளுமன்றத்திலும் பிரதிநிதித்துவம் வகிக்கின்றார்கள். போராட்டம் மூலம் பிரித்தானிய அரச உயர்பதவிகளிலும் ஆயுதப்படைகளில் உயர்பதவிகளையும் வகித்து வருகின்றனர். பெரும் பான்மையாக ஆங்கிலேயர்கள் வாழும் நாட்டில் மிகச் சிறுபான்மையாக வாழும் வந்தேறு குடிகளான கறுப்பர்கள், ஏன் ஆசிய தேசத்தவர்கள்கூட சமமான உரிமைகளுடன் வாழ்கின்றார்கள். சகல தொழிலாளர்களும் சமமாக நடத்தப்படுகிறார்கள். அங்கும் இனவாதம் இல்லாமலில்லை. ஆனால் சட்டத்திற்கு மதிப்பளித்து மக்கள் கௌரவமான பிரஜைகளாக வாழக்கூடிய ஜனநாயக ஆட்சி-முறை அங்கு நிலவுகிறது. எதிர்க்கட்சிகளின் நியாயமானகோரிக்கைகளுக்குப்பிரித்தானியநாடாளு மன்றத்தில் மதிப்பளிக்கப்படுகிறது. ஆளும் கட்சியின் நடவடிக்கைகள் நாட்டுக்கு நலன்பயப் பனவாக இருந்தால் எதிர்க்கட்சிகள் ஆதரிக்கின்றன.

இவ்வாறான ஜனநாயக பாரம்பரியம் படைத்த ஜனநாயகத்தின் தாய்நாடு என்று போற்றப்படும் பிரித்தானிய நாட்டினால் ஆட்சி செய்யப்பட்ட இலங்கை நாட்டிற்கு ஜனநாயகத்தின் அடிப்படை யிலான அதாவது பிரித்தானிய பாராளுமன்ற ஆட்சி-முறையை இலங்கையர்களுக்குக் கற்றுக் கொடுத்து ஆட்சியை நடத்தும் தகைமை அவர்களுக்கு உண்டு என்று 1948இல் இலங்கைக்கு சுதந்திரத்தை வழங்கிச் சென்றனர். சுதந்திரம் வழங்கிச் செல்லும் போது மலையகத்தில் 150ஆண்டுகளுக்கு மேலாக வாழ்ந்து வந்த 10 இலட்சம் தமிழ்த் தொழில-ாளர் ஜனநாயக உரிமைகளை வழங்கி அவர்களை மனிதர்களாக நடத்துங்கள் என்று கூறிச் சென்றார்கள்.

சுதந்திர இலங்கையில் நடைபெற்ற முதலாவது பர்ராளுமன்றத் தேர்தலில் மலையகத்திலிருந்து ஏழு தமிழ்ப் பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்பட்டனர். ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் அவர்களுக்கு வழங்கப்பட்ட வாக்குரிமையின் அடிப்படையில் தமிழ்த்தொழிலாளர்கள் சார்பில் 7 பிரதிநிதிகள் முதலாவது பாராளுமன்றத்திற்குத் தெரிவானார்கள்.

முதல் தேர்தலில் ஆட்சிக்கு வந்த டி.எஸ்.சேன நாயக்க தலைமையிலான ஐ.தே.கட்சிக்கு இது வயிற்றெரிச்சலாக இருந்தது. எழுபது வீதமான சிங்களப் பெரும்பான்மையைக் கொண்ட சிங்கள இனத்திற்குத் தலைமை தாங்கிய டி.எஸ்.சேனநாயக்க, ஆங்கிலேயர் படிப்பித்த ஜனநாயக ஆட்சிமுறையை மறந்து பெரும்பான்மை இனத்தின் அதிகாரத்தைக் கொண்டு தமிழ்த் தேசிய இனத்திற்கு எதிரான இன ஒதுக்கல் ரீதியில் நடவடிக்கை எடுக்க முற்பட்டார். தமிழ்ப்பெரும் தலைவர்களின் ஒத்துழைப்புடன் பெற்றுக்கொண்ட இலங்கையின் சுதந்திரத்தை பெரும்பான்மையைக்கொண்ட சிங்கள அரசு சட்டங்களைத் துர்ப்பிரயோகம் செய்ய முற்பட்டது. ஜனநாயகம் என்ற போர்வையில் இனஒதுக்கல் நடவடிக்கைகள் அரங்கேறின.

1948இல் பத்து இலட்சம் தமிழ்த்தோட்டத் தொழிலாளர்களின் உரிமைகளைப் பறித்து அவர்களை நாடற்றவர்களாக சிங்கள அரசு கொடுத்த முதல் அடியே தமிழ்த் தொழி லாளர்களுக்கு இழைக்கப்பட்ட ஆரம்ப நட வடிக்கையாகும். அதனால் அத்தொழிலாளர்கள் அனுபவித்த இன்னல்களும் அனர்த்தங்களும் அளப்பரியன. அவர்களது பாதிப்புக்களை இத்தொடர் கட்டுரையில் பின்னால் விவரிக்கப்படும். மலையகத் தொழிற்சங்கங்கள் 50 வருடங்களாக நடத்தி வரும் உரிமைப் போராட்டங்கள் அதனால் ஏற்பட்ட உயிர் இழப்புக்கள் மற்றும் பாதிப்புக்கள் ஒரு பெரிய வரலாறு.

(தொடர்ச்சி அடுத்த இதழில்....)


GET YOUR CAREER IN SHAPE

pitman training

Hand-on training to take your skills and career to the next level

Enrol NOW for a Pitman Training Diploma and you'll be able to start a new career and earn a good salary without building up big debts!

**Pitman Diplomas**
- Accounting Tech with AAT
- Office Manager
- Web/Graphic Design
- Executive PA
- Legal/Medical Secretary
- Social Media
- Business Management
- IT Support Technician

**Pitman Courses**
- Typaz - Touch Typing
- Sage 50 Accounts
- Sage 50 Payroll RTI
- ECDL
- MS Office 2013
- PC Basic Skills

All our courses can lead to a rewarding and well-paid careers

**Other Vocational Courses we Offer**
- Childcare Training (CACHE) - Level 2 /3
- Food Hygiene Level 2 Training
- ESOL Entry3 Exam Preparation Classes
- General English -Reading/Writing/Listening/ Speaking

Life in the UK
B1- Exam Preparation Classes
- Practice more than 500+ Questions
- NEW - History Questions
- Language support for all our students
- Immigration consultancy support for students

- Impress employers with high level skills
- Qualify quickly with flexible learning
- Get the job you want and earn while you learn

Call us now for FREE and friendly one-to-one career advice

Microsoft IT Academy Program Member | CompTIA Authorized Partner | cache | bcs Registered Course Provider | CompTIA A+

Pitman Training Wembley 020 8903 9580

Web: wembley.pitman-training.com/ Email: wembley@pitman-training.net
Visit us: Hazel House, 1-3 Lancelot Road, Wembley HA0 2AL

TNA
Tamil National Alliance
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

# தந்தை செல்வாவின் அரசியல் வாழ்வும் அறவழிப்போரட்டமும்

ஈழத்தமிழர்களுக்கு ஒரு சுயாட்சியைப் பெற்றுக் கொடுப்பதற்காக 30 ஆண்டு களாகத் தொடர்ந்து போராடியவர் தந்தை செல்வா. இலங்கை சுதந்திரம் அடைந்தவுடன் பெரும்பான்மை அதிகாரம் கொண்ட சிங்களக் கட்சிகள் குறிப்பாக ஐக்கிய தேசியக் கட்சி தமிழர்களின் பலத்தைக் குறைப்பதற்கு 10 இலட்சம் மலையகத் தமிழ் மக்களின் வாக்குரிமைகளையும், குடியுரிமை-களையும் பறிப்தற்கு நாடாளுமன்றத்தில் 1949ல் கொண்டு வரப்பட்ட பிரசா வுரிமைச் சட்டத்தை முழுமையாக எதிர்த்தவர் தந்தை செல்வா அவர்கள்."இன்று அவர்களுக்கு நாளை எமக்கு"என்று கூறிய தீர்க்கதரிசனம் 1956ல் பண்டார நாயக்கா அரசாங்கம் கொண்டு வந்த "சிங்களம் மட்டும்" சட்டதின் மூலம் நிதர்சனமாகியது. ஒற்றை ஆட்சியின் கீழ் தமிழ் பேசும் மக்களுக்கு விடுதலை கிடையாது என்று தீர்க்கமாக உணர்ந்த தந்தை செல்வா 1949ல் இலங்கைத் தமிழரசுக் கட்சியை நிறுவி சமஷ்டி அரசியல் அமைப்பைப் பிரகடனப்படுத்தி-னார். அதாவது ஐக்கிய இலங்கைகுள் வடகிழக்கு இணைந்த ஒரு சுயாட்சி தான் எமது கோரிக்கை என்று தெளிவாக் கூறினார்.




அன்றைய சிங்கள அரசுகள் இதைப் புரிந்துகொள்ளவில்லை. அதன் பின்னர் இடம்பெற்ற 30 வருட ஆயதப் போராட்ட மௌனத்தின் பின் இன்றைய நல் லாட்சியினர் தமிழ் பேசும் மக்களுக்கான அரசியல் தீர்வு சமஷ்டி அரசியல் மூலம் தான் தீர்க்க முடியும் என கருத்துக்கள வெளியிட்டு வருகின்றனர்.

தமிழ் மக்களின் அரசியலை நேர்மையாகவும், நிதானமாகவும், துணிவாகவும், தூய்மையாகவும் நடத்தி வந்த திரு.சா.ஜே.வே.செல்வநாயகம் (தந்தை செல்வா) மலேசியாவில் "ஈப்போ" என்ற மானிலத்தில் 31-03-1898ல் பிறந்தவர். மலாய மொழியில் ஈப்போ என்பதற்கு தூய்மை என்பது பொருள். தூய்மை என்ற பொருள் தாங்கியுள்ள மானிலத்தில் பிறந்ததால் போலும், இவருடைய தனிப் பட்ட வாழ்விலும் அரசியல் வாழ்விலும் தூய்மை துலங்கியது.

இவர் மலேசியாவில் பிறந்தாலும் அவரது தந்தையார் அங்கு இறந்து விட்டதால் மிகச்சிறுவயதில் யாழ்ப்பாணம் வந்தார். அங்கு தமது படிப்பைத் தொடர்ந்தார். யாழ்ப்பாணம் தூயபரியோவான் கல்லூரியிலும், யாழ்ப்பாணக் கல்லூரியிலும் பயின்று இளம் அறிவியல் (B.sc) பட்டத்தைப் பெற்று, சில காலம் ஆசிரியராக கொழும்பு சென்தோமஸ் கல்லூரியிலும், வெஸ்சிலிக் கல்லூரியிலும் பணி புரிந்த பின்னர் சட்டக் கல்லூரியில் சட்டம் பயின்று ஒரு சட்ட மேதையாகி பெயர் பெற்ற குடியியல் வழக்கறிஞராக (civil Lawyer) விளங்கினார்.

சட்டத் துறையில் பிரசித்தி பெற்றிருந்த காலத்தில் அவருக்கு கியூ.சி பட்டமும் கிடைத்தது. சட்டத் துறையால் ஈட்டிய பெரும் தொகை பணத்தை அரசிய லுக்காக செலவிட்ட பெரும் தலைவர். பணத்துடன் அரசியலுக்கு வந்து முழு வதையும் அரசியலுக்காக செலவிட்ட பெருந்தலைவர். 1948ல் தமிழ் மக்களின் எதிர்கால அவலத்தை உணர்ந்து அரசியலுக்கு வந்த தந்தை செல்வாவைத் தமிழர்களின் தலைமை தேடிச் சென்றது. தலைமையை ஏற்ற சாமுவேல் ஜெம்ஸ் வேலுப்பிளளை செல்வநாயகம் அவர்கள் 30ஆண்டுகளாக தமிழ் மக்களுக்கு சுயாட்சியைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடத்திய அறவழிப் போரட்டம் ஒரு வரலாறு. அன்று தந்தை செல்வா காட்டிய வழியில் இன்று ராஜதந்தரப் போராட்டம் நடைபெறுகிறது. 1950ம் ஆண்டு திருமலையில் நடைபெற்ற தமிழ் அரசுக்கட்சியின் முதலாவது மாநாட்டில் தந்தை செல்வா தமிழ்த் தேசியத்தை நேசித்து முழங்கிய வீர முழக்கங்களை இன்றைய தமிழ் அரசியல் வாதிகள் கருத்தில் கொள்ளுதல் வேண்டும்.

தந்தை செல்வா தனது தலைமைப் பேருரையில் கூறியவை " இப்போதிருக்கும் நிலையில், நாம் விடுதலை பெறுவதற்கு ஒரு சுதந்திரத் தமிழரசை நிறுவுவது இன்றியமையாதது என்பது எமது திடமான நம்பிக்கையாகும்". 65 ஆண்டுகளுக்கு முன்பே தந்தை செல்வா கூறிய தீர்க்க தரிசனம். மேலும் "ஒரு மனிதனின் பூரணமான மனோவிருத்திக்கு, அவன், தானிருக்கும் நாடு தன்னுடையதே என்றும் நாட்டின் அரசாங்கமும் தனதே என்று கருத வேண்டியது அவசியமாகும்.

1948ல் நாடாளுமன்றத் தேர்லில் போட்டியிட்டு வெற்றி பெற்ற நாள் தொடங்கி 1977 வரையும் அரசியலுக்காக தம்மை முழுமையாக அற் பணித்த பெருந்தலைவர். 1956ல் "சிங்களம் மட்டும்" சட்டத்தை எதிர்த்து காலி முகத்திடலில் மேற்கொண்ட சத்தியாக்கிரகம் தொடக்கம் பல போராட்டங்கள் நடத்தப்பட்டன. 1958ல் திருமலை யாத்திரை, 1961ல் சத்தியாக் கிரகம் வடகிழக்கில் அரச நிருவாகத்தை 52 நாடகள் ஸ்தம்பிதம் அடையச் செய்த வரலாற்றுப் போராட்டம், சிறீ எதிர்ப்புப் போராட்டம், பாத யாத்திரை சட்ட மறுப்புப் போராட்டம். அரசிற்கு எதிராக தபால் முத்திரை வெளியிட்ட சட்ட மறுப்பு போராடங்களால் அரசாங்கத்தை கதிகலங்க வைத்தார். இப்போராட்டங் களுக்கு அடி பணிந்த சிங்கள அரசு தந்தை செல்வாவுடன் இரு ஒப்பந்தங்கள் செய்து கொண்டனர். இவ்வாறு 1957ல் பண்டா-செல்வா ஒப்பந்தமும் 1965ல் டட்லி - செல்வா ஒப்பந்தமும் செய்யப்பட்டன. ஆனால் சிங்களத் தலைவர்கள் இரு ஒப்பந்தங்களையும் கிளித்தெறிந்தன் மூலம் தமிழ்த் தலைவர்களை ஏமாற்றி விட்டனர். அதனால் வேதனை அடைந்தை செல்வா தமிழ் அரசியல் கட்சிகளை ஒன்றுபடுத்தி போராடுவதற்கு வழி வகுத்தார். அன்றிருந்த இளைஞர் பேரவை, மாணவர் பேரவை தந்தை செல்வாவின் அரசியல் முடிவுக்கு பக்க பலமாக இயங்கினார்கள். இந்தப் பலத்துடன் தந்தை செல்வாவின் தலைமையில் உருவான தமிழர் விடுதலைக் கூட்டணி பின்வரும் முடிவை எடுத்தது.

தமிழ் இனம் அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தை நடத்துவதனாலோ, உடன் படுக்கைகளைக் கைச்சாத்திடுவதனாலோ எவ்வித பலனும் தரப்போவதில்லை என்ற முடிவுக்கு வந்தார் தந்தை செல்வா. தந்தை செல்வா மறைந்து 40 வருடங் களின்பின் அரசியல் தீர்வைப் பெற இன்றையதமிழத் தலைமை முயன்று வருகிறது. 1970ல் பதவிக்கு வந்த சிறிமாவோ அரசாங்கம் 1972ல் புதிய அரசியல் அமைப்பைக் கொண்டு வந்த போது கடுமையான நிலைப்பாடு ஒன்றை எடுக்க வேண்டிய தேவை செல்வநாயகத்திற்கு ஏற்பட்டது. இந்த நிலையில் இரண்டு நடவடிக்கைகளை செல்வா மேற்கொண்டார். முதலாவதாக தமிழ் அமைப்புக் களை ஒரு கூட்டமைப்புக்குள் ஒன்றுபடுத்தினார்.

இரண்டாவது தமிழ் மக்கள் 1972ன் அரசியல் அமைப்பை ஏற்கவில்லை என்பதை நிருபிப்பதற்காக இடைத்தேர்தல் ஒன்றை நடத்துமாறு கோரி தமது நாடாளுமன்றப் பதவியைத் துறந்தார். தமிழ் பேசும் மக்களின் உரிமைக்காக பெரும் தியாகம் செய்தார். மூன்று வருட காலமாக காங்கேசன்துறைக்கான இந்த இடைத் தேர்தலை நடத்த அரசு தயங்கியது. பின்னர் 1975ல் இத்தேர்தலை நடத்திய போது, ஆளும் கட்சி செல்வநாயகத்திடம் படுதோல்வி அடைந்தது.

1956க்கும் 1977க்குமிடைப்பட்ட காலத்தில் செல்வநாயகம் எதிர்கொண்ட சவால்கள் பல. ஆனால் அரசியல் மதி நுட்பத்துடனும், உறுதிப்பாட்டுடனும் தமது இலக்கை நோக்கி அவர் சென்றார். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவர் விலை

(தொடர்ச்சி 12ல்....)

தந்தை செல்வாவின் (11ன் தொடர்ச்சி....)

போகவில்லை, விட்டுக் கொடுக்கவுமில்லை. தமிழ் பேசும் மக்களின் பாரம் பரிய தாயகம், தன்னாட்சி போன்ற கருத்துக்கள் இன்று தாராளமாகப் பயன் படுத்தப்படுகின்றது என்றால் அதற்கு வழிசமைத்தவர் தந்தை செல்வா தான்.

1976ல் வட்டுக்கோட்டை மகாநாட்டைக் கூட்டி வட்டுக்கோட்டை தீர்மானத்தை அதாவது தமிழீழத் தீர்மானத்தை நிறைவேற்றினார். தமிழீழத்திற்குப் போராடுவது ஓர் வில்லங்கமான காரியம் என்றும் உறுதியாகச் சொன்னார். இத்தீர்மானத்தை தமிழ் மக்களின் அங்கீகத்துக்கு விடு முன்னர் 1976 ஏப்ரல் 26ம் திகதி மறைந்தார் என்ற செய்தி தமிழ் பேசும் மக்களை ஆழ்ந்த கவலையில் ஆழ்த்தியது. ஆனால் அவர் நிறைவேற்றிய தீர்மானத்தை அவரின் மறைவின் பின் 1977ல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் வடகிழக்கு வாழ் தமிழ்பேசும் மக்கள் முழுமையாக வாக்களித்து தமிழ் ஈழக் கோரிக்கையை அங்கீகரித்தனர். அக்கோரிக்கையை வென்றெடுப்பதற்காக 30 ஆண்டுகள் நடைபெற்ற வலுவான ஆயுதப் போராட்டத்தை சிங்கள அரசாங்கம் உலக நாடுகளின் ஆயுதப்பலத்துடன் முறியடித்து முள்ளிவாய்க்காலில் தமிழ் மக்களுக்கு பேரழிவை ஏற்படுத்தியது. 2009 மே மாதத்துடன் ஆயுதப் போராட்டம் மௌனித்தது.

இது வில்லங்கமான காரியம் என அன்று தந்தை கூறிதை சிந்திக்க வேண்டும். தந்தை செல்வா கூறிய சமஷ்ட அடிப்படையிலான அரசியல் தீர்வை இராஜ தந்திரவழியில் முன்னெடுத்து வருகின்றார்கள்.

(ஐ.தி.சம்பந்தன், Dr. Ravee இலண்டன்)

## காணாமல் போனவர்கள், இடம்பெயர்ந்தோர், பட்டதாரிகள் வாழ்வில் ஒளியேற்றுங்கள்: ஜனாதிபதியிடம் கோரினார் வடக்கு முதல்வர் சி.வி

வடக்கு கிழக்கில் காணாமல் போனவர்கள், இடம் பெயர்ந்தவர்கள், வேலையற்ற பட்டதாரிகளின் வாழ்வில் ஒளியேற்றுங்கள் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடத்தல் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

வடக்கிலிருந்து இராணுவம் வெளியேறவேண்டும் என்பதற்கான காரணங்களை சுட்டிக்காட்டி வட மாகாண முதலமைச்சர் காணாமல் போனவர்கள் அலுவலகம் அமைக்கப்படவேண்டுமென வலி யுறுத்தியதோடு காணாமலாக்கப்பட்டுள்ளனர் என உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் காணாமலாக்கப் பட்டமைக்கான சான்றிதழ்கள் வழங்கப்படவேண்டு மெனவும் குறிப்பிட்டுள்ளார்.



மேலும் வேலையற்ற பட்டதாரிகள் விரும்பும் பட்சத்தில் பொலிஸ் பிரிவில் உதவி பொலிஸ் பரிசோதகர் பதவிகளில் காணப்படும் வெற்றிடங்களில் அவர்களை இணைத்துக்கொள்ளுமாறு கோரிக்கை முன்வைத்த வடக்கு முதல்வர், இராணுவ முகாம் களுக்கு அருகில் உள்ள பெண் தலைமைத்துவ குடும்பங்கள் பாரிய பிரச்சினைகளுக்கு முகங்கொ டுப்பதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் வடக்கு முதல்வர் சி.வி.விக்கினேஸ்வரனுக்குமிடையிலான விசேட சந்திப்பொன்று ஜனாதிபதி செயலகத்தில் இடம் பெற்றிருந்தது.

## வெளிநாடுகளுக்கு பெண்களை அனுப்ப வேண்டாம் - மஸ்கெலியாவில் ஆர்ப்பாட்டம்

வெளிநாடுகளுக்கு பெண்களை அனுப்பி அடிமை தொழிலில் ஈடுப்படுத்துவதை தவிர்த்து அவர்களின் வாழ்வாதாரத்தை இலங்கையில் உறுதிப்படுத்த வேண்டும் என வலியுறுத்தி சுதந்திரத்திற்கான பெண்கள் அமைப்பு மஸ்கெலியா நகர பஸ் நிலையத்திற்கு அருகாமையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டனர்.




இந்த ஆர்ப்பாட்டத்தில் சுமார் 50ற்கும் மேற்பட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் கலந்து கொண்டு "வெளி நாட்டில் அடிமை தொழில் செய்வதற்கு பதிலாக பாதுகாப்பான தொழிலை உறுதி செய், மலிவான பணியாளர்களாக பெண்கள் வெளிநாட்டுக்கு விற்கப்படுவதை நிறுத்து, வெளிநாட்டில் அனர்த்தங்களுக்கு உள்ளானவர்களுக்கு உடனடியாக இழப்பீடு வழங்கு, வெளிநாட்டிலுள்ள பணிப் பெண்களின் உயிர்ப் பாதுகாப்பை உறுதி செய்" போன்ற வாசகங்கள் எழுதிய பதாதைகளை ஏந்தி கோஷங்களை எழுப்பியவாறு இந்த போராட்டத்தை முன்னெடுத்தனர்.

பொருளாதார கொள்கைக்காக மலையக பெண் களை மட்டுமன்றி நாட்டில் அனைத்து பிரதேச பெண்களையும் வெளிநாட்டு தொழில் வாய்ப்பில் ஈடுப்படுத்த அனுப்புவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும் என அறிவுறுத்தி இந்த பெண்கள் அமைப்பு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

அண்மையில் மஸ்கெலியா பிரதேசத்தில் மத்திய கிழக்கு நாடு ஒன்றுக்கு பணிப்பெண்ணாக சென்று 4 மாதங்களின் பின் பிணமாக கொண்டு வரப்பட்ட கற்பகவள்ளியின் குடும்பத்தாரையும், மத்திய கிழக்கு நாடுகளில் பணிப்புரிந்து பாதிக்கப்பட்ட மஸ்கெலியா பிரதேசத்தை சேர்ந்த பெண்களுடைய குடும்பத்தாரையும் இணைத்துக் கொண்டு இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

TNA
Tamil National Alliance
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

## மஹிந்த தலைமையில் வரலாறு கூறும் மே தின கூட்டம் பசில் ராஜபக்ஷ



எமக்காக இருந்த கட்சி தற்போது தளம்பளடைந்து விட்டது. இருப்பினும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் ஸ்ரீ லங்கா பொது ஜன பெரமுனவின் மே தின பொதுக்கூட்டம் இலங்கை வரலாற்றில் அதிகமானவர்கள் கலந்துக் கொண்ட மே தின கூட்டமாக பதிவாகும் என முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

புத்தளம் வெண்ணப்புவ பகுதியில் இடம்பெற்ற ஸ்ரீ லங்கா பொது ஜன பெரமுனவிற்கு புதியர்களை இணைத்துக்கொள்ளும் நிகழ்வில் கலந்துக்கொண்டு உரையாற்றுக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



## இந்து சமுத்திரத்தில் இலங்கையின் தேவை அவசியம்..!

இந்து சமுத்திரத்தில் இலங்கை தனித்துவமான பாத்திரத்தை ஏற்கவேண்டுமெனவும் சிசெல்ஸ், மொரிசியஸ், மாலைத்தீவு உட்பட்ட தீவுகளுக்கும் இலங்கையின் பொருளாதார ஆதிக்கம் தற்போது அவசியமான தேவையாகவுள்ளதாகவும் முன்னாள் மாலைத்தீவு ஜனாதிபதி மொஹமட் நசீட் தெரிவித்துள்ளார்.

இந்து சமுத்திரத்தில் இலங்கையின் தேவை மற்றும் மாலைத்தீவின் பொருளாதார ஆக்கிரமிப்புக்கள் தொடர்பில் ஊடகமொன்றுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.



# GANAPATHY CASH & CARRY

*For all your Groceries & Seafood*

## GANAPATHY CASH & CARRY & WINE MARKET

*For all Your Home Needs Under One Roof*

Tel: 020 87954627 | Fax: 020 89033185 | Email: stantonys@btconnect.com

- இலங்கை உணவுப்பொருட்கள்
- இந்திய உணவுப்பொருட்கள்
- பழ வகைகள்
- உடன்மரக்கறி வகைகள்
- கடலுணவுப் பொருட்கள்
- மளிகைப் பொருட்கள்

அனைத்தையும் ஒரே இடத்தில்
பெற்றுக் கொள்ள உங்கள் நினைவில்
என்றும் இருக்க வேண்டிய இடம்

- Fresh Vegetables
- Chilled food
- Fresh Food
- Frozen Food
- Frozen Sea Food
- Refrigerated Room for Vegetables
- Pooja Items

- Srilankan, Indian News
- Indian Grocery
- Cookware
- International Calling Cards
- Wine Mart
- Wheel Chair Access

*Opening Hours:*
*6.00 a.m. - 12.00 p.m. (Midnight)*

CAAVERI

MATHANGI

Niru Brand
நிரு பிராண்ட்

மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்

# WINE MART

**Incorporated in the Ganapathy Chain**

உங்களுக்குத் தேவையான அனைத்து விதமான உள்நாட்டு,
வெளிநாட்டு மதுபானங்கள் மற்றும் குளிர்பானங்கள் கிடைக்கும்

34-38 Ealing Road, Wembley, Middx HA0 4TL










# திருமந்திரம் (பாகம் 16) (சைவசித்தாந்த ரத்தினம் நாகேந்திரம் கருணாநிதி) திருமந்திரம் என்னும் தமிழ் மந்திரம் மூவாயிரம்

"மூலன் உரைசெய்த மூவாயிரம் தமிழ்
ஞாலம் அறியவே நந்தி அருளது
காலை எழுந்து கருத்துஅறிந்து ஓதிடின்
ஞாலத் தலைவனை நண்ணுவர் அன்றே" பாடல் 99

திருமூலர் அருளிய மூவாயிரம் பாடல்களான தமிழ் மந்திரங்கள், இந்த உலகம் பயன் அடைய, நந்தி எம்பெருமான் அருளாலே திருமூலர் திருவாக்காக வெளிப்பட்டது. இம்மந்திரங்களை ஒவ்வொருநாளும் காலையில் எழுந்து, அதன் உண்மைப் பொருள் உணர்ந்து, படித்துப் பாராயணம் செய்தால் உலகுக்கெல்லாம் தலைவனாகிய சிவப் பரம்பொருளின் பேரருள் கிடைக்கப் பெறுவர்.

### எல்லோருக்கும் பொதுவான திருமந்திரம்

"வைத்த பரிசே வகைவகை நன்நூலின்
முத்தி முடிவிது மூவா யிரத்திலே
புத்தி செய்து பூர்வத்து மூவாயிரம் பொது
வைத்த சிறப்புத் தரும்இவை தானே" பாடல் 100

ஆன்மாக்கள் உய்ய வகுத்து வைத்த பரிசே இத திருமந்திரம் என்னும் நல்ல வேதம். இதில் உள்ள மூவாயிரம் பாடல்களும் வீட்டின்ப விளக்கமாகும். அறிவுபூர்வமாகச் சிந்தித்துச் செய்யப்பட்ட மூவாயிரம் தமிழ் மந்திரங்களும் எல்லோருக்கும் பொது வானவை. சிந்தையில் பதித்து செபிப்பவர்களுக்குச் சிறப்பைத் தருபவை இம்மந்திரங்களே.

### சுந்தர ஆகமம் திருமந்திரம்

"வந்த மடம்ஏழும் மன்னும் சன்மார்க்கத்தின்
முந்தி உதிக்கின்ற மூலன் மடவரை
தந்திரம் ஒன்பது சார்வு மூவாயிரம்
சுந்தர ஆகமச் சொல் மொழிந்தானே" பாடல் 101

சிவ நெறி பரப்ப வந்த திருமடங்கள் ஏழு. இவற்றில் சன்மார்க்க நன்நெறியில் நின்று திருத்தொண்டு செய்ய என்று முதன் முதலாகத் தோன்றியது திருமூலர் திருமடம். ஒன்பது தந்திரம் தொடர்பான மூவாயிரம் மந்திரங்கள் என்னும் இவ்அழகிய திருமந்திர மொழியாகிய ஆகமத்தைத் திருமூலர் அருளினார்.

### தவயோகிகள் எழுவர்

"கலந்தருள் காலாங்கர் தம்பால் அகோரர்
நலந்தரு மாளிகைத் தேவர் நாதாந்தர்
புலம்கொள் பரமானந்தர் போக தேவர்
நிலம்திகழ் மூலர் நிராமயத் தோரே" பாடல் 102

திருவருளும் குருவருளும் கலந்த மெய்த் தவயோகிகள் காலாங்கர், அகோரர், திருமாளிகைத் தேவர், நாதாந்தர், பரமானந்தர், போகநாதர், திருமூலர் என்னும் எழுவராவர். இவர்கள் அனைவரும் இறவா உடல் பெற்ற தவஞானிகள்.

### வேத விழுப் பொருள்

"அளவுஇல் இளமையும் அந்தமும் ஈறும்
அளவுஇல் காலமும் நாலும் உணரில்
தளர்விலன் சங்கரன் தன்அடியார் சொல்
அளவில் பெருமை அரிஅயற்கு ஆமே" பாடல் 103

காலகாலமாக என்றும் குறையாது இருக்கின்ற எல்லையில்லாத இளமைத் தோற்றமும், அளவிட இயலாத அருளும், எண்ண முடியாத பல கோடி கற்ப காலமாக நான்மறைகளாலும் உணர்ந்தறிய முடியாததாகிய சிவபெருமானின் அடியவர்களாகிய மெய்த் தொண்டர்கள் மொழிந்த மந்திரங்களின் சொல்ல முடியாத பெருமை, திருமாலும், பிரமனும் கூட அறிந்துணர முடியாததாகும்.

### மூவரும் ஒருவரே

"ஆதிப் பிரானும் அணிமணி வண்ணனும்
ஆதிக் கமலத்து அலர்மிசை யானும்
சோதிக்கில் மூன்றும் தொடர்ச்சியில் ஒன்றுஎனார்
பேதித்து உலகம் பிணங்குகின் றார்களே"
பாடல் 104

உலகத் தோற்றத்திற்கு மூல முதல் காரணமான உருத்திரனும், அழகிய ஆடை ஆபரணங்கள் அணிந்திருக்கும் நீலமணி வண்ணமுடைத் திருமாலும், உயிர்களைப் படைப்பவனாகிய தாமரை மலர் மேல் இருக்கின்றவனான பிரமனும், படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் மூன்று செயல்களால் வேறானாலும், மூவரும் ஒரு மூலப் பரம்பொருளான சிவனே என்பதை உணராமல், இவர்கள் மூவரும் வேறு, வேறு என்று வித்தியாசப்படுத்தி, உலகத்தவர் மோதி முரணுகிறார்களே!

### பிரணவப் பொருளானவன் பெருமான்

"ஈசன் இருக்கும் இருவினைக்கு அப்புறம்
பீசம் உலகில் பெருந்தெய்வம் ஆனது
ஈசன் அதுஇது என்பார் நினைப்பிலார்
தூசு பிடித்தவர் தூர் அறிந்தார்களே"
பாடல் 105

இறைவன் இருவினையாகிய கன்மம் மாயை என்னும் இரண்டுக்கும் இருப்பிடமானவன். இரண்டையும் கடந்து நிற்பவன். இந்த ஈசனை அடைய "ஓம்" என்னும் பிரணவ மந்திரமே முதல் பெரும் தெய்வம். இந்த உண்மையை அறியாமல் கடவுள், அது, இது எனப் பலவாறு கூறுவர். இவர்கள் உண்மை உணராதவர்கள். ஆனால் இந்த உண்மையைத் தூய நல்லொழுக்கத்தைக் கடைப்பிடிக்கும் மெஞ்ஞானிகள் உணர்ந்து, பரம்பொருள் மூலத்தையே அறிந்திருந்தார்கள்.


பார்வை

பார்வையின் 6ம் ஆண்டு நிறைவை
முன்னிட்டு



## அந்தித் தமிழ் அரங்கம்

பார்வையின் 6ம் ஆண்டு நிறைவை முன்னிட்டு தமிழக் கலை, கலாச்சார, மொழியை முன்னிலைப்படுத்தி அதன் வாசகர்களுடனும், வர்த்தக ஆதரவாளர்களுடனும், பார்வையின் அபிமானிகளுடனும் அந்தித் தமிழ் அரங்கம் நடைபெறவுள்ளது.

**Hayes நகரில் 23.07.2017 ஞாயிறு மாலை 5 மணிக்கு**

**இடம் பெறவுள்ள நிகழ்விற்கு**
**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

**Insein Team – பார்வை**

**Tel: 0790 843 7921**

CHELIAN LAW
SOLICITORS
COMMISSIONERS FOR OATHS

# A.F. Ilanchelian
## SOLICITOR
## Commissioners for Oaths

# 24 Hours
# Crime & Immigration Service
# 07939 474 342

**Immigrations Related Applications and Appeals**
Immigration
EEA Law
Entry Clearance
Human Right Claims
Asylum Claim
Citizenship and Nationality
Detention & Deportation
Judicial Review

**Family Matters & Property**

| | |
|---|---|
| Divorce Matters | Residential |
| Ancillary Relief | Commercial |
| Other Family Matters | Landlord |

SQM Delivery Partnership

**NO WIN NO FEE**
Personal Injury
Road Traffic Accident
Slip and Trip
Work Related Accidents
Clinical Negligence

**Crime** (Public Funding Available)
24 hour Police Station Representation,
Representation at Magistrate/Crown Courts

Property – உடமைகள் • Residential Property • Commercial Property • Lardlord & Tenancy Matters

வடமேற்கு லண்டன் பகுதியில் மிகுந்த பிரபல்யத்துடன் தனது வாடிக்கையாளர்களுக்கு மிக உயர்தர சேவையும் ஆலோசனையையும் வழங்கி வரும் சட்ட நிறுவனம்

PREMIER HOUSE
1, CANNING ROAD, HARROW
MIDDLESEX HA3 7TS
TEL: 020 7139 863, Mobile: 07939 474 342

Authorised and Regulated by the Solicitors regulation Authority. SRA No. 634528

# KRISHNA CASH & CARRY



## KRISHNA
FRESHNESS - VALUE - CHOICE

704-708 Uxbridge Road, UB4 0RX London. Tel: 0208 848 1250

BHARAT INDUSTRIAL ENTERPRISES LIMITED · ITC Enduring Value · KINGS · Shankar · SANJANA

The above trademark products are available


# Krishna
## RESTAURANT

**700 Uxbridge Road Hayes Greater London UB4 ORX**
**www.krishnarestaurantlondon.co.uk/ Email: infokrishnarestaurant@mail.**













### Krishna Private Catering

Thank you for choosing Krishna or team would make it their pleasure in assisting or planning your future events. Here at Krishna we can cater for events of 10-120 guests on premise. If you choose to have your event at another location of your own choosing we can provide services from 500 -2000 guests or more. We cater for your weddings, office parties, social events, black tie affairs, religious events.

Please also inquire about our weekly corporate discounts of 10% off When you book your lunch or dinner booking with 15 guests or more on Monday to Friday.

Restaurant is the next door of Krishna Cash & Carry. The purchase receipt has to be presented at Krishna Restaurant to enjoy our weekly special buy one and get one free (take away is only applicable on selected items listed on the menu.)

# அரவணைப்பகம்

## ARAVANAIPPAKAM

## රැකවරණය









சிதம்பரம், கள்ளிக்குளம், நொச்சிமோட்டை, ஓமந்தை.

Sithamparam, Kallikkulam, Nochchimoddai, Omanthai.

அரவணைப்பகம் ஓய்வு பெற்ற உயர் அதிகாரிகளினால் உருவாக்கப்பட்ட நல்லெண்ணக் கருத்துக்களைக் கொண்டு 2013ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இதன் ஆரம்பப் பணிகள் ஓரளவு நிறைவு பெற்றுள்ளது. அதாவது பெரிய ஓர் நிலப்பரப்பைச் சொந்தமாக அதற்கான விலை கொடுத்துப்பெற்றுள்ளார்கள். தற்பொழுது அந்த நிலத்தில் ஓர் குடிசை அமைக்கப்பட்டு ஓர் சிறிய இளம் குடும்பம் ஒன்றை காவலுக்காக குடிவைத்துள்ளார்கள்.

ஆதரவற்ற எம்மவர்களுக்கு தங்குமிட வசதிகள் அமைந்த கட்டடத்தை அவர்கள் அமைக்க முன்வந்துள்ளார்கள். புலம் பெயர் மக்களாகிய நாங்கள் மனம் உவந்து வழங்கும் பொருளாதார உதவி அந்த இல்லத்தில் குடியிருக்க விண்ணப்பித்தவர்களை குடியமர்த்தி ஆதரிக்க, பெரு மனது படைத்த கருணையுள்ளங்கள் பார்வை நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு உங்களுக்குத் தேவையான விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதை பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.


நீங்கள் உங்களுடைய நிதிப் பங்களிப்பை பார்வை நிறுவனத்திற்கு ஊடாகவோ அல்லது நேரடியாக அவர்களின் வவுனியா வங்கிற்கோ அனுப்பிவைக்க பார்வை நிறுவனத்தினர் ஆவன செய்துதருவார்கள் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.



இப்பணியின் புகைப்படங்கள் அடுத்தடுத்த இதழ்களில் வெளியிடப்படும் மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ளவும், நீங்கள் பார்வை நிறுவனத்துடன் தொடர்பை ஏற்படுத்தவும் அழையுங்கள்:

இலண்டனில் **0790 843 7921**

insein.pri@gmail.com







# எம் கேள்வியும் உங்கள் பதிலும்

1. அனைத்து கட்சிகளும் அரசியல் அமைப்பில் திருத்தம் மேற்கொள்ள விருப்பம் தெரிவித்துள்ளது.
2. அரசியலமைப்பில் நிறைவேற்று ஜனாதிபதி முறைமை இல்லாமலாக்கப் படவேண்டும்.
3. அரசியலமைப்பில் நிறைவேற்று ஜனாதிபதி முறைமை இல்லாமலாக்கப்படவேண்டும்.
4. தமிழ் மொழி அரசகரும மொழியாக நிறைவேற்றப்பட்டு 30 வருடங்கள் கழிந்தும் நடைமுறைப்படுத்தவில்லை.
5. இலங்கைக்கு எதிரான பிரேரணையில் தற்போது பொறுப்புக் கூறல் விடயத்தில் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.
6. ஜனாதிபதி சிறிசேன தலையிட்டு இந்த நகர்வை தடுக்கா விட்டால் இந்த பயணம் சர்வதேச விசாரணையில் வந்து முடியும்.
7. பாராளுமன்றில் சபை நாகரிகத்தையும் ஒழுக்க விதிகளையும் கடைப்பிடிக்க வேண்டும்.
8. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்கள் தனது (24 03 2017) 68வது அகவையில் காலடி எடுத்து வைக்கிறார்.
9. நாட்டின் எதிரும் புதிருமான இரண்டு கட்சிகளை இணைத்து நல்லாட்சி அரசாங்கத்துக்கு வித்திட்டார். பிரதமர் ரணில்.
10. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உத்தியோகப்பூர்வமாக ரஷ்ய ஜனாதிபதி விளாமிடிர் புட்டினை சந்தித்துள்ளார்.
11. மனித உரிமைகள் ஆணையாளர், விசாரணைக்கு சர்வதேச நீதிபதிகள் முறையை பின்பற்ற வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.
12. சர்வதேச மனித உரிமை ஆணையாளரின் அறிக்கைகளுக்கிணங்க கலப்பு நீதிமன்ற முறைக்கான அழுத்தங்கள் இருக்கும்.
13. கடல்சார் விஞ்ஞான அமெரிக்கா ஒப்பந்தம் ஆழ் கடல் நீர் நிலைகள், கிழக்கிந்திய கடலில் நீரோட்டங்கள் தொடர்பில் ஆராயப்பட்டன.
14. பிரபாகரன் பிறப்பதற்கு முன்னரே எமது இனத்துக்கான போராட்டத்தை ஆரம்பித்தவன் நான். -அருட்தந்தை இம்மானுவேல்..
15. எமது நாட்டில் இடம்பெற்ற இன அழிப்பு தொடர்பில் 15 வருடங்களுக்கு முதலே அமெரிக்காவில் தெரிவித்தேன். அருட்தந்தை இம்மானுவேல்.
16. சுங்கத் திணைக்களத்தை ஊழல் அற்ற நிறுவனமாக மாற்றினால் வெளிநாடுகளில் இருந்து கடன்பெற தேவை இருக்காது.
17. சிங்களச் சட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து 1958 ஆம் ஆண்டு நான் போரிட்டேன். அருட்தந்தை இம்மானுவேல்.
18. செல்வநாயகம், பிரபாகரன் ஆகியோர் எமது இனத்துக்காக போராடியவர்கள். - அருட்தந்தை இம்மானுவேல்.
19. முல்லைத்தீவு மாவட்டத்துக்கான தேசிய விளையாட்டு மைதானம் ஒன்றை அமைப்பதற்கான ஆரம்ப பணிகள் முன்னெடுக்கப்பட்டது.
20. பயங்கரவாத தடைச்சட்டத்திற்கு மாற்றீடான பதிலீட்டு சட்டத்தை சமர்ப்பிப்பதற்கு முயற்சி எடுக்கப்படுகிறது.

1. எதில் திருத்தம் மேற்கொள்வதற்கு அனைத்து கட்சிகளும் தீர்மானம் நிறைவேற்றின?.
2. அரசியலமைப்பு தொடர்பாக ஆராய்வதற்கு எது அமைத்து கருத்துக்கள் கேட்டறியப்பட்டன?.
3. எந்த மொழி 1987ஆம் ஆண்டுல் அரச கரும மொழியாக்கப்படுள்ளது?.
4. யார் இந்த நாட்டு பிரசைகள் என்ற வகையில் சம உரிமை வழங்கப்பட வேண்டும்?.
5. எதை முழுமையாக ஏற்றுக்கொண்டு நடைமுறைப்படுத்த அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது?.
6. தமிழர் தரப்பும், புலிகளின் பிரதிநிதிகளும் எதிர்பார்த்ததை எது தனது இணக்கத்தின் மூலம் ஏற்றுக்கொண்டுள்ளது?.
7. தற்போதைய நல்லாட்சி அரசாங்கத்திற்கான ஆரம்பப் புள்ளியை இட்டவர் யார்?.
8. முன்னாள் ஜனாதிபதியும், தற்போதைய பா. உறுப்பினருமான மஹிந்த ஜனாதிபதி எங்கு ஆஜராகியுள்ளார்?.
9. எதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்காக அமைச்சர் மஹிந்த அமரவீர அமெரிக்காவிற்கு சென்றுள்ளனர்?.
10. 69 ஆண்டுகளாக இடம்பெற்ற எது என்ற கருத்தில் எவ்வித மாற்றமும் இல்லை. அருட்தந்தை இம்மானுவேல்?.

இதில் 19, 20 எனும் பக்கங்களில் இருக்கும் கேள்விகளுக்கு பதிலை எமது முகவரிக்கு அனுப்பி பங்குபெறுபவர்கள் பெறும் புள்ளிக் வருடாந்த பரிசுப்போட்டிக்கு உள்வாங்கப்படும்.

## பங்குனி 6ம் திகதி 2017 - 19ம் பக்கத்தில் வந்த கேள்விகளுக்கான விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1. சரி | 11. சரி | 1. | தேசிய அரசாங்கம். |
| 2. சரி | 12. சரி | 2. | ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் |
| 3. சரி | 13. சரி | 3. | வடக்கில். |
| 4. சரி. | 14. சரி. | 4. | வெளிநாட்டவர்கள். |
| 5. சரி | 15. சரி | 5. | 69 வருடங்கள். |
| 6. சரி | 16. சரி | 6. | பொலிசாரை. |
| 7. சரி | 17. சரி | 7. | இருபதுக்கு. |
| 8. சரி | 18. சரி | 8. | வன்னி மாவட்டத்தில் |
| 9. சரி | 19. சரி | 9. | லக்ஷ்மன். |
| 10. சரி | 20. சரி | 10. | வர்த்தமானி |

## பங்குனி 6ம் திகதி 2017 - 20ம் பக்கத்தில் வந்த கேள்விகளுக்கான விடைகள்

1. தென் ஆசியப்பகுதியில்.
2. கடல்வழி.
3. இலங்காபுரி.
4. சிங்களவர்கள்.
5. மொழியாக.
6. முஸ்லிம்கள்.
7. ஆங்கிலேயரின்.
8. பத்து இலட்சம்.

முழுப்பெயர்: ______________________

தொலைத்தொடர்பு இல: ______________________

தபால் குறியீடு (Pot code): ______________________

# மொழி பெயர்ப்பு பரிசுப்போட்டி

## தமிழ் வாக்கியத்தை வாசித்து ஆங்கில மொழிக்கு மாற்றுக

1. அரசியலமைப்பு பணிகள் நிறைவடைந்து சட்டமூலம் தயாரிக்க இருக்கின்றது.
2. நாட்டுக்குள் சிறுபான்மையினரின் இனப்பிரச்சினைக்கு தீர்வு வழங்கப்படவேண்டும்.
3. இலங்கைக்கு ஜெனீவா பிரேரணையை நிறைவேற்றுவதற்கான இரண்டு வருட கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.
4. அமெரிக்க பிரேரணையை அரசாங்கம் முழுமையாக நிறைவேற்ற மீள் இணக்கம் தெரிவித்துள்ளது.
5. வேலையின்மைப் பிரச்சினையைத் தீர்க்கும் முகமாக பத்து இலட்சம் வேலைவாய்ப்புகளை உருவாக்கும் முயற்சி - பிரதமர்.
6. மொஸ்கோவில் ஜனாதிபதியுடன், வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர குழுவினரும் கலந்து கொண்டுள்ளனர்.
7. யுத்த குற்ற விசாரணை பொறிமுறையில் சர்வதேச நீதிபதிகள் என்ற பேச்சுக்கே இடமில்லை.- ஸ்ரீ. சு. கட்சி.
8. நாட்டில் இருக்கும் திணைக்களங்களில் சுங்க திணைக்களத்திலேயே பாரியளவில் ஊழல் மோசடி இடம்பெற்று வருகின்றது.
9. தமிழ் ஊடகங்கள் எனது செய்திகளை திரிபுபடுத்தி வெளியிடுவதை காணமுடிகின்றது. - மனோ கணேசன்
10. முல்லைத்தீவு பரந்தன் வீதியில் 32 ஏக்கர் நிலப்பரப்பில் இந்த விளையாட்டு மைதானம் அமையவுள்ளது.

## ஆங்கில வாக்கியத்தை தமிழ் மொழிக்கு மாற்றுக

1. The Office of the High Commissioner (OHCHR) has to raise US $ 362,000 for Sri Lanka
2. Several countries extended the time for Sri Lanka to fully implement the 30/1 HRC resolution.
3. The resolution 2015 has to be implemented without any amendments or additions.
4. The highest allocation of US $ 241,500 will be set aside for general temporary assistance.
5. The 45th commemoration of late Philip Gunawardena, anti-imperialist freedom fighter will be held in Colombo .
6. Finance Minister Ravi Karunanayake, who has been named as the best Finance Minister of the Asia.
7. President Maithripala Sirisena who paid a three-day official visit to Russia with Ministers Mangala
8. The National Freedom Front (NFF) leader MP Wimal Weerawansa's fast unto death campaign to protest against the judiciary process.
9. MP Weerawansa respected the ruling given by the High Court to refuse his bail application.
10. The United States has stripped economic activity from ethical considerations and social costs.

## இலங்கையைப் பற்றிய கேள்விகள் - Score : 24

1. எதன் மையமாக இலங்கையில் விளங்குவது தேயிலை, இறப்பர், தென்னைப்பயிர் செய்கையாகும்?.
2. பாலா தம்பு அவர்களின் தலைமையிலான எச்சங்கத்தின் பங்களிப்பும் குறிப்பிடத்தக்கதாகும்?.
3. எந்த ஊழியர் சங்கம் தமிழர்களின் சுய நிர்ணய உரிமையை 1982இல் அங்கீகரித்தது?.
4. ஆங்கிலேயர் எதை 150ஆண்டுகளுக்கு மேலாக ஆட்சி செய்தனர்?.
5. எங்கிருந்து கொண்டுவரப்பட்ட தமிழர்களே இன்று மலையகத்தில் வாழும் தமிழ்த் தொழிலாளர்கள்?.
6. தமிழ்த் தொழிலாளர்கள் குறைந்த சம்பளத்தில் கூடிய வேலை செய்து மலையகப் பிரதேசத்தைப் பசும் பூமியாக்கியவர்கள்.
7. எதன் நியாயமான கோரிக்கைகளுக்குப் பிரித்தானிய நாடாளுமன்றத்தில் மதிப்பளிக்கப்படுகிறது?.
8. இலங்கையில் நடைபெற்ற எந்த தேர்தலில் மலையகத்திலிருந்து ஏழு தமிழ்ப் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டனர்?.

## 20 ஆம் பக்கத்தில் வந்த கேள்விகளுக்கான விடைகள்

1. The protest held by a group in Ceylon China industrial object has been wounded 21 people.
2. The Police have used tear gas & water bombs on those who tried to reach BOI boarder.
3. IGP, Punsitha Jeyawartne has also presented where the glaze held in between Police & Protestors.
4. The Government has decided to reserve 15.000 acres to form industries in Hambantota.
5. Maithiripala Srisene has been elected as sixth Authorised President in Jan.8th, 2015 in Ceylon.
6. Ranil Wigiramasinghe had a chance to defeat Mahinda Rajaphaksa as a man.
7. In 2010, Sarath Ponsekka has suffered because of failing to carry out the Rajaphaksa's order.
8. Each & every person who has supported to candidate Srisena faced deep effects.
9. Lot of people had been suffered in our family with the fear on related to the Justice sector of Government in last period.
10. Some of the Ceylon Professionals in the homeland had a fear that they might have political harassment.

1. பிரதம மந்திரி றனில் சுவிற்சலான்ட் செல்லவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.
2. அரசைக் கட்டியமைக்க எதிர் அணியிலிருந்து 15 பேர் இணையவுள்ளார்கள்.
3. இராணுவத்திலிருந்து தப்பியோடிய இராணுவ அதிகாரிகள் உத்தியோகமான முறையில் விலகிக்கொண்டார்கள்.
4. புதிய அரசியமைப்பை உருவாக்க இரண்டு பிரதான கட்சிகளும் ஏற்றுக் கொண்டுள்ளது.
5. இலங்கையின் பிரதிநிதிகளாக த.தே.கூட்டமைப்பின் எம்.ஏ.சுமந்திரனும் மீன்பிடி அமைச்சின் மந்திரியும் கலந்து கொண்டார்கள்.
6. மீனவர்களின் பிரச்சனை முக்கியத்துவம் பெறுவதால் பேச்சு வார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.
7. பூர்வீகக் காணிகளை திருப்பித் தருவார்கள் என்பதாலேயே நாங்கள் நல்லாட்சி அரசாங்கத்திற்கு வாக்களித்தோம்.
8. மாதிரிக் கிராமத்தில் வாழ்வது சொந்த நாட்டில் மறியலில் இருப்பதற்குச் சமனாகும்.
9. நாடு பூராகவும் அதிக வேலை வாய்ப்புக்களை உருவாக்க அரசாங்கம் திட்டங்களை நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.
10. தேசிய வருமானத்தை அதிகரிக்க உல்லாசம், உற்பத்தித் துறைகளை நாங்கள் அபிவிருத்தி செய்ய வேண்டும்.

TNA
Tamil National Alliance
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

## சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கை..!



டெங்கு மற்றும் எச்.வன்.என்.வன் காய்ச்சல் தொற்றியதனால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும் வழமைக்கு மாறான கால நிலை குறித்த நிலைமைக்கு காரணம் என சுகாதார அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் நாடு பூராகவும் சுமார் 27,898 பேர் டெங்கு காய்ச்சலினால் பீடிக்கப்பட்டதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இவர்களுள் 50 வீதமானவர்கள் மேல் மாகணத்தில் பதிவாகியுள்ளதாக டெங்கு தடுப்புப்பிரிவு தெரிவித்துள்ளது. யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு, கம்பஹா, களுத்துறை, காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை, இரத்தினபுரி மற்றும் கேகாலை ஆகிய 11 மாவட்டங்களில் டெங்கு பரவும் அபாயம் உள்ளதாகவும் டெங்கு தடுப்புப்பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது.

## புதிய அரசியலமைப்பு தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் கருத்து

புதிய அரசியலமைப்புக்கான மக்கள் கருத்து வாக்கெடுப்பு நல்லாட்சி அரசாங்கத்துக்கு கடினமான திருப்பமாக இருக்குமெனினும் அது நூறு வீதம் வெற்றி பெறக்கூடிய ஒரு இலக்காகும் என வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

மேலும் புதிய அரசியலமைப்புக்கான மக்கள் கருத்துக்கணிப்பு பிரிக்சிட் போன்ற சர்வதேச நிகழ்வுகளால் பிழையான பார்வைக்கு இட்டுச் சென்றிருந்தாலும் புதிய அரசியலமைப்பு மக்களுக்கு எவ்வாறு உதவும் என்பதை மக்கள் நன்கு அறிந்திருந்தால் அவ் அரசியலமைப்பு நிறைவேற்றம் தொடர்பில் மாற்றுக் கருத்துக்களுக்கு இடமிருக்காது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

புதிய அரசியலமைப்பு தொடர்பில் ஊடக மொன்றுக்கு அளித்துள்ள செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

## "தீர்வுக்கு பலம்" ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய இளைஞர் மாநாடு இன்று



ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய இளைஞர் மாநாடு கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் "தீர்வுக்கு பலம்" என்ற தொனிப்பொருளில் நடைபெற்றுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதல் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

நாடெங்கிலும் உள்ள ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் மாவட்ட பிரிவை பிரதிநிதித்துவப் படுத்தி 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இளைஞர் யுவதிகள் மாநாட்டில் கலந்து கொண்டார்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய இளைஞர் மாநாடு இம்முறை 13 வருடங்களின் பின்னர் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

## வடக்கை தெற்கு உணர்ந்துள்ளது: யாழ். மாவட்ட சு.க. அமைப்பாளர் அங்கஜன்



தெற்கு இளைஞர்களுக்கு இருக்கும் பிரச்சினையே வடக்கு இளைஞர்களுக்கும் இருக்கின்றது. அதனால் தான் வடக்கு இளைஞர்கள் ஆயுதமேந்தும் நிலைக்கு தள்ளப்பட்டனர் என்பதை தெற்கில் இருப்பவர்கள் தற்போது உணர்ந்துள்ளனர் என ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி பாராளுமன்ற உறுப்பினரும் யாழ். மாவட்ட அமைப்பாளருமான இராமநாதன் அங்கஜன் தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய இளைஞர் சம்மேளனம் சென்ற ஞாயிற்றுக்கிழமை கொழும்பு சுகததாச அரங்கில் இடம்பெறவுள்ளது.

நடைபெறவுள்ள சம்மேளனம் தொடர்பாக ஊடகங்களுக்கு தெளிவுபடுத்தும் செய்தியாளர் சந்திப்பு ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் இடம் பெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் கூறுகையில்,

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பங்கு பற்றலுடன் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய இளைஞர் சம்மேளனம் சுகததாச அரங்கில் இடம்பெற்றது.

இந்த சம்மேளனத்தில் வடக்கு, கிழக்கு, மலையகம் போன்ற பிரதேசங்களில் இருந்தும் எமது இளைஞர், யுவதிகள் கலந்து கொண்டனர். ஆயிரத்துக்கு மேற்பட்ட இளைஞர்கள் அதில் கலந்து கொள்ள எதிர்பார்க்கப்பட்ட போதும் இடப்பற்றாக் குறை காரணமாக 500 பேர் வரைக்குமே கலந்துகொள்ள எமக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் இளைஞர், யுவதிகள் எதிர்நோக்கிவரும் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை பெற்றுக் கொடுக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுத்து வருவதனால் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய இளைஞர் சம்மேளனத்தில் வடக்கு, கிழக்கில் இளைஞர், யுவதிகள் கலந்து கொள்வதற்கு ஆர்வமாக இருக்கின்றனர். அதே போன்று நாட்டில் இடம் பெற்று வந்த மதவாதம் பிரிவினை வாதங்களை அடக்குவதற்கும் ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளதுடன் சகல இன மக்களையும் ஒன்றிணைத்துள்ளார்.

மேலும் தெற்கு இளைஞர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினையும் வடக்கு இளைஞர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினையும் ஒரே மாதிரியாகவே இருக்கின்றது. அதாவது ஒட்டு மொத்த இளைஞர்களும் இன்று எதிர்கொள்ளும் பிரதான பிரச்சினையாக இருப்பது தொழில் இல்லாமையாகும். அதனால் தான் வடக்கு இளைஞர்கள் அன்று ஆயும் ஏந்துவதற்கு காரணமாக இருந்தனர் என்பதையும் தெற்கு இளைஞர்கள் இன்று உணர்ந்துள்ளனர்.

எனவே நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தேசிய இளைஞர் சம்மேளனத்தின் போது இளைஞர்கள் எதிர்கொள்ளும் பிரதான பிரச்சினை களுக்கு தீர்வுகள் பெற்றுக் கொடுக்கப்படவுள்ளன. அத்துடன் 13 வருடங்களுக்கு பிறகு நடைபெற்ற இந்த சம்மேளனம் ஒட்டு மொத்த இளைஞர் யுவதிகளுக்கும் புத்துணர்ச்சியை ஏற்படுத்துவதாக அமையும் என்றார்.

## கூட்டு எதிர்கட்சி மாநாடு தெஹிவளையில்

கூட்டு எதிர்க்கட்சியின் "அரச சொத்துகளைப் பாதுகாக்கும் அமைப்பு" ஏற்பாடு செய்துள்ள அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் மாநாடு தெஹிவளையிலுள்ள ஜயசிங்க மண்டபத்தில் நடைபெற்றது.

கூட்டு எதிர்க்கட்சி ஏற்பாடு செய்துள்ள மாநாட்டில் தேசிய வளப்பாதுகாப்பு தொடர்பான துறை சார்ந்தோர் உட்பட அதிகளவானோர் கலந்து கொண்டனர். அதன் போது தேசிய வளங்களைப் பாதுகாக்க வேண்டிய அவசியம் உணர்த்தப்படுவதுடன், அரசாங்கம் தற்போது தேசிய வளங்களை சர்வதேச மயப்படுத்துவதுடன் தனியாருக்கு விற்பனை செய்வதனை தடுத்து நிறுத்துவதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றி மிகுந்த அவதானம் செலுத்தப்படவுள்ளதாக கூட்டு எதிர்கட்சியின் அரச சொத்துகளைப் பாதுகாக்கும் அமைப்பின் ஏற்பாட்டாளர் தெரிவித்தார்.

TNA
Tamil National Alliance
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

## இலங்கைக்கு ஐம்பத்தைந்து இலட்சம் தினார்கள் கடனுதவி குவைத்தில் ஒப்பந்தம் கைச்சாத்து



களு கங்கை அபிவிருத்தித் திட்டத்துக்கு உதவும் வகையில் ஐம்பத்தைந்து இலட்சம் குவைத் தினார்களை கடனாக அளிக்கும் திட்டத்துக்கான ஒப்பந்தம் குவைத்தில் கைச்சாத்திடப்பட்டது.

இலங்கை சார்பில் நிதியமைச்சின் செயலாளர் கலாநிதி ஆர்.எச்.எஸ்.சமரதுங்கவும் குவைத் சார்பில் அரேபிய பொருளாதார அபிவிருத்திக்கான குவைத் நிதியத்தின் பிரதி இயக்குனர் அஹமட் அல் ஒமரும் இவ்வொப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

ஏற்கனவே கடந்த 2009ஆம் ஆண்டு இதற்கான மூல ஒப்பந்தம் இவ்விரு நாடுகளிடையே கைச் சாத்திடப்பட்டிருந்தது. மொத்தமாக பத்து மில்லியன் குவைத் தினார்கள் இந்த ஒப்பந்தம் மூலம் களு கங்கை அபிவிருத்தித் திட்டத்துக்குக் கிடைக்க வுள்ளது.

இந்நிதியுதவி மூலம் மகாவலி அபிவிருத்தி வலயப் பிரதேசத்தில் விவசாய நிலங்கள் மற்றும் உற்பத்திப் பொருட்களை அதிகளவில் உருவாக்குவதன் மூலம் நாட்டின் உணவுத் தேவையைப் பூர்த்திசெய்யலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

## வில்பத்து வர்த்தமானியால் ஏற்பட்ட சிக்கல் : ஜனாதிபதி செயலாளரை அவசரமாக சந்தித்த முஸ்லிம் அமைப்புகளிடம் பல வாக்குறுதிகள்

வில்பத்து வர்த்தமானி அறிவித்தல் தொடர்பில் அப்பிரதேச மக்களுக்கு பாதிப்பில்லாத வகையில் தீர்வு பெற்றுத் தருவதற்கு நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதியின் செயலாளர் பி.பி. அபேகோன் முஸ்லிம் சிவில் அமைப்புகளிடம் உறுதியளித்துள்ளார். மேலும் அப்பிரதேசம் வனஜீவராசிகள் திணைக்களத்தின் கீழும் வர்தமானி அறிவித்தல் வெளியிடுவதற்கு ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் அதனை மேற்கொள்ளப்போவதில்லை எனவும் அவர் உறுதியளித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கையொப்பமிட்டு வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலினால் ஏற்பட்டுள்ள சிக்கல் நிலையைத் தீர்வு காணும் நோக்கில் ஜனாதிபதியின் செயலாளருக்கும் முஸ்லிம் சிவில் அமைப்புகளுக்குமிடையிலான சந்திப்பு நேற்று ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது. அச் சந்திப்பின்போதே செயலாளர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அன்று பி.ப. 2 மணி முதல் மாலை 4 மணி வரையில் தொடர்ந்த குறித்த சந்திப்பில் மன்னார் அரசாங்க அதிபர் வை.தேஷப்பிரிய, வன விலங்கு மற்றும் வன ஜீவராசிகள் திணைக்களங்கள அதிகாரிகள், மகவலி அபிவிருத்தி மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமைச்சின் அகாரிகள் உட்பட உயர் அதிகாரிகளும இச்சந்திப்பில் கலந்து கொண்டிருந்தனர். முஸ்லிம் சிவில் அமைப்புகள் சார்பில் ஜம்இய்யதுல் உலமா சபையின் பொதுச் செயலாளர் எம்.எம். முபாரக் மௌலவி, ஏ.சி. கலீல் மௌலவி, முஸ்லிம் கவுன்ஸிலின் தலைவர் என். எம். அமீன், உப தலைவர் ஹில்மி அஹமட், செயலாளர் எஸ். ஏ. அஷ்கர்கான், சிரேஷ்ட சட்டத்தரணி என்.எம். ஷஹீட் உட்பட அமைச்சர் ரிஷாட் பதியுதீன், பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான், தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அஸாத் ஸாலி உள்ளிட்டோரும் கலந்து கொண்டிருந்தனர்.

அதன் போது குறித்த வர்த்தமானி அறிவித்தலினால் அப்பிரதேச மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகம் அதானல் அம்மக்கள் தற்போது கொந்தளித்துள்ளதாகவும் முஸ்லிம் சிவில் அமைப்புகளின் பிரதி நிதிகள் தெரிவித்தனர். மேலும் கடந்த வெள்ளிக்கிழமை நாடு தழுவிய ரீதியில் ஹர்த்தால் அனுஷ்டிப்பதற்கும் திட்டமிட்டிருந்தனர். இருந்த போதிலும் ஜனாதிபதி, குறித்த பிரச்சினைக்கு எவருக்கும் பாதிப்பில்லாத தீர்வு முன்வைப்பதாகவும் ஆகவே எதிர்ப்பு நடவடிக்கைகளை கைவிடுமாறும் வேண்டிக் கொண்டதற்கிணங்க ஹர்தால் கைவிடப்பட்டது.

அத்துடன் முஸ்லிம்கள் அமைதியான முறையில் இப்பிரச்சினையைத் தீர்த்துக்கொள்வதற்கே எதிர்பார்க்கின்றர். ஆகவே ஜனாதிபதி கையொப்பமிட்டு வெளியிட்டுள்ள வர்த்மானி அறிவித்தலை இரத்து செய்து அப்பிரதேச மக்களின் காணிகளை அவர்கள் பெற்றுக்கொள்வதற்கான உரித்தை உறுதி செய்ய வேண்டும். மேலும் இவ்விவகாரத்தில் உத்தியோகபூர்வ முடிவெடுக்கும் வரையில் குறித்த வர்த்தமானியை இடைநிறுத்த வேண்டும் எனவும் முஸ்லிம் சிவில் அமைப்புகள் சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டது. அத்துடன் பேராதனைப் பல்கலைக்கழக புவியியல் துறைப் பேராசிரியர் நௌபல் வில்பத்து தொடர்பான ஒளிப்பட விவரணங்களையும் சமர்ப்பித்து விளக்கமளித்தார்.

ஆகவே வர்த்தமானி அறிவித்தல் தொடர்பில் சில தவறுகள் இடம் பெற்றுள்ளதை ஏற்றுக்கொண்ட செயலாளர், அவ்வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் குறித்த பிரதேசங்களை வனஜீவராசிகள் திணைக்களத்தின் கீழும் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடுவதற்கு ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் அதனை மேற்கொள்ளப்போவதில்லை எனவும் உறுதியளித்தார். ஆகவே வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தல் தொடர்பில் ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்தி பிரதேச மக்களுக்கு எவ்வித பாதிப்பும் இல்லாத வகையிலான தீர்வை விரைவில் பெற்றுத்தருவாதாகவும் செயலாளர் உறுதியளித்துள்ளார்.



## 279 ஏக்கர் காணிகள் மே 15 இல் விடுவிப்பு : கேப்பாப்புலவு விவகாரம் தொடர்பில் அமைச்சர் சுவாமிநாதன் அறிவிப்பு

கேப்பாப்புலவில் அமைந்துள்ள 279 ஏக்கர் காணிகள் மே மாதம் 15ஆம் திகதி விடுவிக்கப்படுமென சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தெரிவித்தார். இவ்விடயம் தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

எனக்கும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கும் இடையில் கடந்த வாரம் நடைபெற்ற பேச்சுவார்தையின் விளைவாக பாதுகாப்பு அமைச்சு கேப்பாப்புலவில் உள்ள 279 ஏக்கர் காணிகளை மே மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் விடுவிப்பதாக தெரிவித்துள்ளார். அதன் பிரகாரம் 248 ஏக்கர் அரச காணிகள் கேப்பாப்புலவில் இருந்தும் 31 ஏக்கர் தனியார் காணிகள் சீனியாமோட்டையில் இருந்தும் விடுவிக்கப்படவுள்ளன. பாதுகாப்பு அமைச்சின் கோரிக்கைக்கமைய ஐந்து மில்லியன் ரூபா நிதி எமது மீள்குடியேற்ற அமைச்சினால் ஒதுக்கீடு செய்யப்படுமிடத்து மேற்குறிப்பிட்ட திகதியில் விடுவிக்கப் படாதுள்ள 189 ஏக்கர் தனியார் காணிகளும் ஒரு மாத காலத்துக்குள் விடுவிக்கப்படவுள்ளன. மேற்குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் மொத்தமாக 468 ஏக்கர் காணிகள் பாதுகாப்பு அமைச்சின் மூலமாக விடுவிக்கப்படவுள்ளன இக்காணிகள் ஜனாதிபதியினதும் பிரதம மந்திரியினதும் உத்தரவின் பிரகாரம் நடை முறைப்படுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## அர்த்தமுள்ள இந்துமதம் - ஆன்மீகம்

மதுப் பழக்கம் உள்ள ஒருவனே மதுவினால் விளையும் தீமைகளைத் தெளிவாக எடுத்துரைக்க முடியும். எனக்கு இருபதாண்டுகளாக அந்தப் பழக்கம் உண்டு என்பது ஒன்றும் புதிய செய்தியல்ல. அந்தத் தார்மீக ஒழுக்கக் கேட்டிற்கு நான் வக்காலத்து வாங்க வரவில்லை. ஆனால், 'சட்டத்தினால் மதுவை ஒழிக்க முடியாது' என்று நான் வாதிட்டிருக்கிறேன். சட்டம் போட்டு ஒன்றை மறைக்க, மறைக்க அது பற்றிய ஆசைகளே கிளர்ந்து எழும். முழுக்க மூடிக் கொண்டிருக்கும் பெண்ணைப் பார்க்க விரும்பும் கண்ணைப் போல், முழுக்க மறைக்கப்பட்ட ஒன்றைச் சுவைக்க விரும்புவது மனித இயல்பு. ஆகவேதான், 'மதுப் பழக்கம், விலை மாதர் உறவு இரண்டையும் சட்டத்தின் மூலம் ஒழிக்க முடியாது' என்று நான் வாதிடுகிறேன். அடுத்தவனுக்குத் தீமை ப்பயக்கக்கூடிய சமுதாய ஒழுக்கக்கேட்டை -மட்டுமே சட்டம் தடுக்க முடியும்.

தனி மனிதனின் ஒழுக்கத்திற்கு அது உத்தரவாதம் தேடமுடியாது. காரணம் அவன் எங்கேயாவது மறைந்து நின்று கொண்டு, அந்த ஒழுக்கக் கேட்டிற்குப் பலியாவான். ஆகவே, மது, விலைமாதர் என்ற இரு விஷயங்களில் அழுத்தமான 'நீதி' போதனையே மனிதனின் மனத்தை மாற்ற முடியும் ''குடித்தால் உன் உடம்பு கெடும். மலத்துக்கும், சோற்றுக்கும் வித்தியாசம் தெரியாது. காரணம் இல்லாமல் வீண் பகைகளைக் கொண்டு வந்து சேர்க்கும். நீ என்ன சொன்னாலும் உலகம் உன்னை நம்பாது. நீ நிதானமாகப் பேசினாலும் கூட, 'இது குடிகாரன் பேச்சு' என்று தள்ளிவிடும். நீ குடிக்கும் மது, உன் குடும்பத்தின் வாழ்வைக் குடித்துவிடும். உன் வருமானம் பாழாகும். செய்ய வேண்டிய காரியத்தைச் செய்ய வேண்டிய காலத்தில் செய்ய முடியாது.

மதுவினால் நீ நோயுற்றால், உனக்காக யாரும் வருத்தப்படமாட்டார்கள். குடும்பத்தாலும் சமுதாயத்தாலும் ஒதுக்கப்பட்ட புல்லாக, பூச்சியாக நீ மாறி விடுவாய். நற்குலப் பெண்கள் உன் அருகில் வரவே பயப்படுவார்கள். மொத்தத்தில் நீ மனிதனாகவே வாழ முடியாது'' இப்படி அவனுக்கு இடித்துக் காட்டினால், ஒரு கட்டத்தில் இந்த அனுபவம் அவனுக்கு வந்து, மதுவைக் கைவிட்டுவிடுவான். ஆகவேதான், இந்தியா தோன்றிய காலத்தில் இருந்து, பின்

தொடர்ச்சி அடுத்த இதழில்....




## சிறுநீரகம்: உடலின் கழிவுத் தொழிற்சாலை

டாக்டர் கு.கணேசன்

நெஞ்சில் வலி வந்தால், 'எதுக்கும் ஒரு இசிஜி எடுத்துக்கோ... மாரடைப்பு ஏதாவது இருந்துடப் போகுது' என அக்கறையோடு சொல்வதற்கு ஆயிரம் பேர் இருக்கிறார்கள். வயிற்றில் வலி வந்தால், 'எண்டோஸ்கோப்பி பார்த்துக்கொள்வது நல்லது. அல்சராக இருக்கும்...' என்று யோசனை சொல்வதற்கும் ஆட்கள் இருக்கிறார்கள். இதுபோல் முதுகில், விலாவில் வலி வந்தால், 'அது வாயுவாகத்தான் இருக்கும். பூண்டு சாப்பிடு, சரியாகிவிடும்' என்றுதான் நெருங்கியவர்கள் சொல்வார்களே தவிர, 'வயிற்றை ஸ்கேன் எடுத்து சிறுநீரகம் (Kidney) சரியா இருக்கான்னு பார்த்துக்கோ...' என ஆத்ம நண்பர்கூட ஆலோசனை சொல்லமாட்டார்.

காரணம், நம் மக்களிடம் இதயம் மற்றும் இரைப்பையைத் தெரிந்த அளவுக்குச் சிறுநீரகம் குறித்த விழிப்புணர்வு அவ்வளவாக இல்லை. படித்த ஆண்களுக்கே கூட சிறுநீரகம் எங்கே இருக்கிறது என்கிற விவரம் தெரியாது! சிறுநீர் வெளியேறுகிற உறுப்பைச் சுற்றி இருக்கும் விரைகளையே (Testes) சிறுநீரகங்கள் என்று கருதுபவர்கள்தான் அதிகம்! இதயம் ஒரு பம்ப், மூளை ஒரு கம்ப்யூட்டர், நுரையீரல் ஒரு காற்று இயந்திரம் என்று வர்ணித்தால் சிறுநீரகம் ஒரு ஃபில்டர் வடிகட்டி! இது ஒரு இரட்டைப் பிறவி. இரைப்பைக்குப் பின்புறம், முதுகெலும்பின் இருபுறமும் கைக்கு அடக்கமான மாங்காய் அளவுக்குச் சிறுநீரகங்கள் இருக்கின்றன. ஒவ்வொன்றும் 150 கிராம் எடையில், 12 செ.மீ. நீளத்தில், 6 செ.மீ. அகலத்தில், 3 செ.மீ. தடிமானத்தில் அவரை விதை வடிவத்தில் அமர்ந்துள்ளது.

ஒரு சிறுநீரகத்தை நெடுக்காக வெட்டிப் பார்த்தால் இரண்டு பகுதிகள் கண்ணுக்குத் தெரியும். குழிவான பகுதியில் ஒரு பை போன்ற அமைப்பைப் பார்க்கலாம். அதற்குப் பெயர் 'சிறுநீரக பெல்விஸ்' (Renal pelvis). அதையே கொஞ்சம் உற்றுப் பார்த்தால், குவிந்த பகுதியிலிருந்து அதில் நிறைய குழாய்கள் திறப்பது தெரியும். இவை 'காலிசெஸ்' (Calyces). சிறுநீரை உற்பத்தி செய்வதுதான் சிறுநீரகத்தின் பிரதான வேலை. எப்படிச் சாத்தியப்படுகிறது?

இது நெஃப்ரான்களின் சாமர்த்தியம். 'நெஃப்ரான்' (Nephron) என்றால்? சிறுநீரகத்தின் துப்புரவுப் பணியாளர்கள். மருத்துவ மொழியில் சொன்னால், சிறுநீரக முடிச்சுகள். ஒவ்வொரு சிறுநீரகத்திலும் ஏறத்தாழ 10 லட்சம் நெஃப்ரான்கள் இருக்கின்றன. ஏராளமான முடிச்சுகளுடன் ஒரு /ஸ்பிரிங் மாதிரி சுருட்டி வைக்கப்பட்டிருக்கும் இந்த நெ/ப்ரான்கள் எல்லாவற்றையும் நேராக இழுத்து, இணைத்தால் ஒரு மெல்லிய டெலிபோன் கேபிள் மாதிரி ஆகிவிடும். இதன் நீளம் கிட்டத்தட்ட 60 கிலோ மீட்டர். 12 செ.மீ. நீளமுள்ள சிறுநீரகத்துக்குள் 60 கிலோ மீட்டர் குழாயைச் சுருட்டி வைத்திருக்கும் படைப்பின் அற்புதத்தை வியக்காத மருத்துவர் இல்லை!

தொடர்ச்சி அடுத்த இதழில்....



உ

சிவமயம்

லண்டனின் மேற்குப் பகுதிலுள்ள ஈலிங் கனக துர்க்கை அம்மன் கோவிலின் நிர்வாக சபைக்கான தேர்தல் பங்குனி மாதம் 26ம் திகதி 2017ம் ஆண்டு நடைபெற்றது. நிர்வாக சபைக்கான தேர்தலில் புதிய நிர்வாகசபை (2017 – 2019) உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள்.

புதிய நிர்வாகசபை உறுப்பினர்களின் விபரங்கள்:

தலைவர்: திரு. T. யோகநாதன்.

உபதலைவர்: திருமதி. சாரதா கணேஸராஜா.

செயலாளர்: திரு. S. இராமச்சந்திரன்.

இணைச் செயலாளர்: திருமதி. சாந்தா சுந்தரலிங்கம்.

பொருளாளர்: திரு. N. பாலசுப்பிரமணியம்.

உதவிப் பொருளாளர்: திரு. S. ஆதித்தன்.

உத்தியோகப் பற்றற்ற குழு அங்கத்தவர்: திரு. P. கணபதிப்பிள்ளை.

## ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து விலகும் கடிதத்தில் கையொப்பமிட்டார் பிரித்தானிய பிரதமர்..!




ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிப்பதால் பிரிட்டனுக்கு பல்வேறு பாதிப்புகள் ஏற்படுவதாகவும், எனவே ஒன்றியத்திலிருந்து விலக வேண்டுமெனவும் அந்நாட்டில் எழுந்த கோரிக்கைக்கேற்ப, விலகல் கடிதத்தில் கையொப்பமிட்டுள்ளார் பிரித்தானிய பிரதமர் திரேசா மே.

ஐரோப்பிய ஒன்றியத்தில் தொடர்ந்து நீடிப்பதா? வேண்டாமா? என்பது தொடர்பாக நடத்தப்பட்ட பொதுத்தேர்தலில், ஒன்றியத்தில் தொடர்ந்து நீடிக்க வேண்டுமென 48.1 சதவீதமனோரும், விலக வேண்டுமென 51.9 சதவீதமனோரும் வாக்களித்தனர். குறித்த தீர்மானத்திற்கெதிராகவிருந்த முன்னாள் பிரதமர் டேவிட் கேமரூன் பதவி விலகவே, தெரசா மே பிரித்தானிய பிரதமராகி, பிரிக்சிட் சட்டவரைபை அமுல்படுத்துபவதற்கு பல்வேறுப்பட்ட முயற்சிகளை மேற்கொண்டார்.

இச்சூழலில் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் விலகுவதை, அதன் நட்பு நாடுகள் விரும்பவில்லை. குறிப்பாக முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, ஜேர்மனி ஜனாதிபதி ஏஞ்சலா மெர்க்கல், சீன ஜனாதிபதி ஜின்பிங் மற்றும் பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள், ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் விலக வேண்டாமென கோரிவந்தனர்.

ஆனால் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் விலக வேண்டுமென்ற நிலைப்பாட்டிலிருந்து தெரசா மே, அந்நாட்டு மக்களின் முடிவு தொடர்பாக பாராளுமன்றின் இரு அவைகளிலும் ஏற்படுத்திய கடும் விவாதத்தினை தொடர்ந்து மக்களின் தீர்ப்பை ஏற்று கொள்வதென பாராளுமன்றம் அண்மையில் முடிவு செய்து பிரிக்சிட் சட்டவரைபிற்கு அங்கீகாரம் அளித்தது.

இந்நிலையில், ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் வெளியேறும் முடிவை அதிகாரப்பூர்வமாக அறிவிக்கும் கடிதத்தில், பிரதமர் தெரசா மே கையொப்பமிட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தகவல் பகிர்ந்துள்ளன.

மேலும் புருசெல்ஸ்ஸிலுள்ள ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் தலைவர் டொனால்ட் டஸ்க்கிடம், குறித்த கடிதம் ஒப்படைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஐரோப்பிய யூனியனிலிருந்து வெளியேறிய பிரித்தானியா : “லாயிட்ஸ் ஒப் லண்டன்” அதிரடி அறிவிப்பு



உலகின் மிகப்பெரிய காப்பீடு சந்தையான “லாயிட்ஸ் ஒப் லண்டன்” என்ற நிறுவனம் தனது புதிய அலுவலகத்தை பிரஸ்ஸல்ஸ் நகரில் அமைக்க உள்ளதாக தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய யூனியனிலிருந்து பிரித்தானியா வெளியேறுவதால் தமது வர்த்தகத்தை இழக்க முடியாது என தெரிவித்தே தமது புதிய அலுவலகத்தை பிரஸ்ஸல்ஸ் நகரில் அமைக்க முடிவு செய்துள்ளதாக லாயிட்ஸ் ஒப் லண்டன் இன்று தெரிவித்துள்ளது.

லண்டனில் இயங்கி வந்த 329 வருட பழமையான லாயிட்ஸ் ஒப் லண்டன் நிறுவனத்தின் இந்த அதிரடி முடிவானது பிரித்தானியாவின் வர்த்தக வரலாற்றில் பாரிய திருப்புமுனையாக அமைந்துள்ளது.

ஐரோப்பிய யூனியனிலிருந்து முறைப்படி பிரிட்டன் வெளியேறுவது தொடர்பான, பிரதமர் தெரசா மே கையெழுத்திட்ட அறிக்கை பிரஸ்ஸல்ஸ் நகரில் உள்ள ஐரோப்பிய யூனியன் கவுன்சில் தலைவர் டொனால்டு டஸ்க்கிடம் பிரிட்டன் தூதர் சர் டிம் பரோ வழங்கினார். இந்நிலையில் கடிதத்தை வழங்கி ஒரு நாளிலேயே இந்த தீர்மானத்தை லாயிட்ஸ் ஒப் லண்டன் எடுத்துள்ளது.

## லெக்கின்ஸ் அணிந்த பெண்கள் விமானத்தில் பயணம் செய்ய தடை..!

லெக்கின்ஸ் அணிந்த இளம்பெண்கள் விமானத்தில் பயணம் செய்ய அமெரிக்காவின் முன்னணி விமான நிறுவனம் தடை விதித்தது. இந்த விவகாரம் அமெரிக்காவில் பெரும் விவாதப் பொருளாகி உள்ளது.

கடந்த 26 ஆம் திகதி அமெரிக்காவின் டென்வர் விமான நிலையத்தில் இருந்து மினியாபொலிஸ் நகருக்கு செல்ல 2 இளம் பெண்கள் வந்தனர். இருவரும் லெக்கின்ஸ் அணிந்திருந்தனர். இதே போல ஒரு சிறுமியும் லெக்கின்ஸ் அணிந்திருந்தார். 3 பேரும் யுனைடெட் ஏர்லைன்ஸ் விமானத்துக்காக காத்திருந்தனர்.

மூவரும் லெக்கின்ஸ் அணிந்திருந்ததால் அவர்கள் விமானத்தில் பயணம் செய்ய விமான ஊழியர்கள் மறுத்துவிட்டனர். சிறுமி மட்டும் உடனடியாக உடையை மாற்றிவிட்டு அதே விமானத்தில் பயணம் செய்தார். மற்ற 2 பெண்களும் லெக்கின்ஸை மாற்றிவிட்டு அடுத்த விமானத்தில் மினியாபொலிஸ் நகருக்குச் சென்றனர்.

இந்த விவகாரம் அமெரிக்க சமூக வலைதளங்களில் பெரும் விவாதப் பொருளாகி உள்ளது. ஹாலிவுட் நடிகைகள் உட்பட பல்வேறு தரப்பினர் யுனைடெட் ஏர்லைன்ஸ் நிறுவனத்தை கடுமையாக விமர்சித்து வருகின்றனர்.

